உ

சிவமயம்

அமிர்தநாதோபநிடதம்.

௨-௰௧.

இஃது

கிருஷ்ணயஜுர்வேதத்தின்

ஓர்சாகையின் இறுதியிலுள்ளது

மூலபாடம் பொழிப்புரை விசேஷவுரைகளுடன்

சிதம்பரம் ப்ரம்மவித்யா பத்திராதிபரானரு

பரஸமய பஞ்சானன பண்டித பாஞ்சஜன்ய

ப்ரம்மஸ்ரீ

கு. ஸ்ரீநிவாஸதீக்ஷிதரவர்களால்

:(O):

வடமொழியிலியற்றப்பட்ட

அமிர்தநாதோபநிஷத்பிரபை.

என்றவியாக்யானத்திற்கிணங்க

அவர்களாலேயே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

தமது

(நடுக்காவேரி) ஜகத்குருயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது

இதன் விலை .0— —0

1899

[illegible]

—— (௧ × ௧) ——

[illegible]	𑌪𑍃𑌷𑍍𑌠𑌂	𑌪𑌙𑍍𑌕𑍍𑌤𑌿𑌃
[illegible]	௨௭	௯
[illegible]	௪௩	௧
[illegible]	௧௬	௩
[illegible]	௬௨	௨௪
[illegible]	௩௬	௧௮
[illegible]	௧௭	௧௭
[illegible]	௪௩	௨௪
[illegible]	௩௪	௨௧
[illegible]	௨	௨௩
[illegible]	௧௧	௨௯
[illegible]	௩௯	௧௨
[illegible]	௬	௧௮
[illegible]	௨௪	௯
[illegible]	௩௫	௪௩
[illegible]	௨௧	௰
[illegible]	௨௫	௪
[illegible]	௧௪	௫
[illegible]	௧௮	௨௬
[illegible]	௨௩	௩
[illegible]	௩௪	௭
[illegible]	௮	௨௪
[illegible]	௰	௨௩

அமிர்தசாதோபநிஷத் விஷயானுக்கிரமணி.

—(1)—

அமிர்த்நாதோபநிடத

முகவுரை.

இவ்வமிர்தநாதோபநிடதமென்பது யசுர்வேதத்தைச் சேர்ந்த தொன்று. இதிற் சிவபூஜாமாகாத்மியமும், ஷடங்கயோகவிதத்தையும், விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. இவ்வுபநிடதவசனத்தை ஸ்ரீகண்டாதி பூர்வாசாரியர்கள் ஸ்ரீமதப்பய்யதீக்ஷிதசுவாமிகள் இவர்களெடுத்திருக்கிறார்கள். அநேகப்பிரகரணங்களில் இதன் வசனம் வேதாந்திகளால் உதரிக்கப்படும். அன்றி சூதசங்கிதையிலும் இதன் தாத்பரிய சங்கிரஹம் உண்டு. இது சன்னியாசிகளுக்கும், யோகிகளான வானப்பிரஸ்தர்களுக்கும்; இதில் வேண்டிய அநேக விஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவ்வுபநிடதம் மூதறிஞர் சிலரால் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கின்றது. இது சிவாத்வைதிகளுக்கு மிககச்சிறந்ததாமென நினைத்து இதற்கு மிக்க விரிவின்றி "அமிர்தநாதோபநிஷத் பிரபை" என்றபெயருடன் சதோபநிடத வியாக்கியான முறையில் எம்மால் ஒரு வியாக்கியானம் வடமொழியில் இயற்றப்பட்டுள்ளது. அதனை எம் உபநிஷத் வித்தியாவில் தமிழ் பயில்வோருக்கு பயோகமாமாறு ஒருவாறுமொழிபெயர்த்துவெளியிட்டோம். இதனை யேற்று பிரமநிஷ்டர்களான சாம்பவர் எமது முயற்சி தளர்வின்றி நிறைவேறுமாறு ஆதரிப்பாரென எதிர்பார்க்கின்றோம், சுபம்,

கிரந்தகர்த்தா-

அத² ப்³ருஹந்நாராயணோபநிஷத்

பாராயணபாட²: ||

—— () ——

ஸஹ நாவவத்விதி ஶாந்தி: |

ஓம் | ஶாஸ்த்ராணி யஸ்ய த்ருஶோயாஸீ ஜயஸ்ய ஸ்ய வா-
நமோ நம: | பரம்ப்³ரஹ்ம விஜ்ஞாய உத்³தா⁴ரகத்வ ஶோத்ஸ்வ
ஜ்ஞ: || ஓங்காரம் ப்ரணவாத்மகம் விஷ்ணும் க்ருஷ்ணம் ப்ரபோ⁴ஸார
யிஷ்ட | ப்³ரஹ்மலோகவதீ ஶ்ரேஷ்டீ ப்ரணவம் பராயணத்வம் ||
தாவத் ஶ்ரேஷ்ட மஹ்யம் யாவத் ஸ்வயமீஶ்வர: | ஸ்வாதா
ரயவதீஸ்வாநம் பரமாத்மஸ்வரூபம் ஸ்வதி || ஸாத்ராயிம் ஶமதம்
தத்த்வாஶ்ரயம் ஜநவஜீவதம் | ஸ்வரோணஸ்காரோணவ
தம் ஸர்வம் ஸர்வமஸ்து தி || ஶப்³தா³நி ஸ்ரோதம் ஶ்ரேயஸ்வா
ஸ்வம் ஸம்ஸ்ய | ஸ்ரேஷ்டோ த்ருஶ்யோ ப்ரஶ்ரூதயோ ஸ்ரேஷ்டா உ
த்தே || ஸ த்ருணாஸ்யஸ்த்ரய ப்ராணம் ப்ராணாயாமேஶ
மயாமணா | தக்ஷதோ ஶ்ருத ஸஸ்மாஸ்யஸ்த ஷடங்கம் ஶமதம
உக்தே || யயா வஶ்ய தயா தஸ்நா: நமஸ்தே யத்தத
ஸ்மா: | தஶ்யஸ்யத்ரா தாநோஸ்தா நமஸ்தே ப்ராணயா
மணா: || ப்ராணாயாமேஶ ஸ்நேஹ ஶோஷாஸ்தாமணா
ஸ்வஸ்திஸ்வஷ்ட || ப்ரத்யாஹாரேண ஸம்ஸமதூந யஸ்மா
ஶ்ரேஷ்டாஸ்வராஸ்மணாநு || ஸ்வஸ்தம் ஸர்வம் நீசாமாஸ்வ
ரம் ஶ்ரேஷ்டம் ஸ்வயம் | ஸ்வராம் ஶ்ரேஷ்டம் ஶ்ரேஷ்ட ஶரயோ
ராகஷ்டணஸ்ய || ப்ராணாயாமேஶ ஸ்வய: ப்ராணாயாமேஶ
ஷஸ்ரகஸ்ஸஸகா: | ஸவஸ்தா ஸ்தம் ஸம்ப்ராணயாம் ஸாயத்ரீம்

[illegible]

[illegible]

யத்ர யத்ர ஸ்ரீ வெதாவிதலஸ்யொ.விஜாயனெ து| தலுத
வொஹிஜாய கஜ க்ருஷ்ண நிஷ்டஃ||

ஸஹ தர்வக்ஷ்விநிரா க்ஃ |

இதி ஸ்ரீ தநாவெதாவ நிஷ்டஃவொபாராயணவாரஃ

ஸமாப்தஃ ||

உ

சுபமஸ்து.

அமிர்தநாதோபநிடதப் பேருரை.

அவதரணிகை.

இனி ஆசிரியன் திருவுருவமேற்று கருணைக்கடலாய வேத மாதா முமுக்ஷுக்களுக்குபயோகமானபடி ஞானோபாயத்தை நிரூபிக்கின்றாள்.

𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑍍𑌯𑌧𑍀𑌤𑍍𑌯 𑌮𑍇𑌧𑌾𑌵𑍀
𑌅𑌭𑍍𑌯𑌸𑍍𑌯 𑌚 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍁𑌨𑌃 ।
𑌪𑌰𑌮𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌯
𑌉𑌲𑍍𑌕𑌾𑌵𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌯𑌥𑍋𑌤𑍍𑌸𑍃𑌜𑍇𑌤𑍍 ॥ ॥௧॥

(இ—ள்) மேதாவியாய் உள்ளவன் சாஸ்திரங்களைப் படித்து அடிக்கடி சிந்தித்து பரப்பிரம்மத்தையறிந்து கொள்ளியைப்போல் அவைகளை எல்லாம் விடவேண்டும். எ-று

(வி—ரை.) "வித்தைகள்" த்வே வித்யே வேதிதவ்யே பராசைவாபரா ச = இரண்டு வித்தைகள் அறியற்பாலன பரமும் அபரமும் என்பனவாம் அவை. என்று முண்டக வுபநிடதம் முதலிய விடங்களிற் குறிக்கப்பட்ட வித்தைகளை படித்து = முறைப்படி ஆசிரியரிடம் கற்று; அடிக்கடி சிந்தித்து = படித்தபடியே பொருள்கள் மனதிற் பதியவேண்டுவதற்காகத் தியானித்து; அப்படியென்றால் அனுஷ்டானயோக்யமானபடி அந்நூற்பொருள்களை சித்தத்தில் நிறுவி என்பதுங் குறித்தது. இங்ஙனம் அப்பியசிப்பது தனக்குப்படித்த வித்தையுபயோகமாமாறும் மற்றவருக்கும் உபதேசிக்கத்தக்கபடியுமாமாறுமேயென்க; அதன்பயனாய்

மேதாவியாய் = வஸ்துஸொரூபநிஷ்டையடைந்த ... ப்ரப்பிரமத்தை = மாயைஅவித்தையென்ற ... கடந்த சுத்தசைதன்யத்தை; அறிந்து = சொரூபமாக ... மாய் சாக்ஷாத்கரித்து; அவைகளை = முன்னர்மேற்கண்ட சித்திக்காகவே ஆசிரியன்பாற்கற்ற வித்தைகளை; கொள்ளியைப்போல = காடுகளைக்கடக்கவேண்டிக் கையிற்றாங்கிய கொள்ளிக் கட்டையைக்காடுகடந்தவுடனே எறிந்து விடுவான்போல; விடவேண்டும் = விட்டுவிடவேண்டும் இதுவிதியல்ல மனதுடன் கன்மங்களையும் வித்தைகளையும் விடுவதுபெரும்பாவமாதலால்; மற்று அனுவர்த்தமேயாம். உலகத்தில உள்ள பற்றொழிந்து ஆத்மசொரூபமாத்திரையில் நிட்டைகூடினயோகிக்கு என்றும் கன்மங்களைத்தலைதுசகஜமாம் என்பதுமட்டிலே அதன்கருத்து. இதனால் சாஸ்திராப்யாஸம் பயனற்றொழிந்திலது. அதற்கெல்லாம் ஆத்மசொரூபசாக்ஷாத்காரமேபயனாதலால் இவ்வகையான வித்யாத்யாகத்தை துயில்வோன் கைமலர்போல்கழன்றிடும் கன்மம் என்பர்ஆன்றோர் என்க.

அவதரணிகை

இங்ஙனம் வித்தையும் ஒழிந்தபிறகு அக்கணத்தேதிலைபெற்ற ஸொரூபநிட்டைபிராரப்தசரீரம் உள்ளவரை குறைவின்றிநின்று விதேக கைவல்யங்கொடுத்தவுமாறு எவ்விதமுயற்சிஇவன் செய்யவேண்டும் எனவாசங்கையை எதிர்நோக்கி அதற்குவிடையைக்குறித்தோதுகின்றார்.

𑌓𑌂𑌕𑌾𑌰𑌰𑌥𑌮𑌾𑌰𑍁𑌹𑍍𑌯
𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾𑌥 𑌸𑌾𑌰𑌥𑌿𑌮𑍍।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌪𑌦𑌾𑌨𑍍𑌵𑍇𑌷𑍀
𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌰𑌾𑌧𑌨𑌤𑌤𑍍𑌪𑌰𑌃॥ என்று

(இ—ள்) ஓங்காரம் என்றரதத்தில் ஏறி விஷ்ணுவை சாரதியாகக்கொண்டு பிரம்மலோகபதத்தை ... ருத்ராராதனையில் பேரன்புடையவன். எ—து

(வி—ரை) ஓங்காரரதம் = ஓங்காரமென்ற பிரணவமே சுகமாய் மேலான்தத்தையடையச் செய்யும் ரதமாம். இங்கு ஓங்காரம் என்றது .... சூக்குமம், சூக்குமதரம் சூக்குமதமம் எனப்பட்ட மூவகையும் உள்ளதாதலால் காயத்ரீவியாஹிருதிகளும் அப்ப .... "வித்தைகளைவிடுவது" என்பது ஸன்யாஸ .... அதன்பொருளாம் இதுவேநியாயம். அதா .... உ .... ஓங்காரம் ... என்றெடுத்து பிரண .... சொற்கள் சிவனுக்கேயங்கள் எனநிரூபிக்கப்பட்டமையால், பரமஹம்ஸாச்சிரமிகளுக்கு அதுவே போதுமான ..... இவனம் ஸர்வஸித்திகளையும் கொடுக்கு .... வித்தைக்காசிரியன் ஒருவன் வேண்டுமே அவன் .... நிரூபிக்கின்றார் "விஷ்ணுவை .... விஷ்ணுவிவ்விடத்தில் குருவாதலால் சாரதிஎன் .... சரிக்கப்பட்டான். "விஷ்ணு ... விஹாரு = விஷ்ணுவல்ல ... " என்பதாதிசுருதிகளில் ஸ்ரீ ... சிலஞானிகளுட்சிறந்தவன் என நிரூபிக்கப்பட்டமையாலென்க. அதனாலேதான் மகாசாம்பவன்என்று பிரசித்திபெற்ற ஸ்ரீமான் அர்ச்சுனனுக்கு சிவஞானச் செல்வருட்சிறந்த .... பரமாசாரியனானான். புராணங்களிலும் இந்திரத்யும்னன் முதலியபெரியோருக்கு அவனே உபதேஷ்டாவென்று சொல்லப்படுகின்றான். "பிரமலோகபதம்தேடி = பிரமம் = சிவன் அவனது, லோகம் ஸ்ரீசோமலோகம் என்று அதர்வசிகையுபநிடதம் முதலியஉபநிடதங்கள் வகுத்தருளிய இருக்கையிலே. அதுபிரணவத்தின் நான்காவது மாத்திரையின்ஸ்தானமென்றுபநிடதங்களின் கருத்து. அதன் பதம் = இடம்; விஷ்ணுலோகத்துக்குமேலானது அதைத்தேடி = அதையடையக்கருதியிடையறாது அதனையேதியானித்து. செல்வான்என்பது வருவித்துக்கூட்டவேண்டியது. இவ்விதப்பெருமையுடையவன் எவன் என விஞ்ஞிகழுவவனைக்குறிக்கின்றார். "ருத்திராராதனையின்ம்.. ரன்புடையான்" என்று. சிவபூஜாநிஷ்டன் அதன்பொருள். இங்கு "ருத்திரன்" என்று எடுத்தது ஸம்ஸாரபாசத்தைத்தடுக்கு மாற்றலுடைய பிறைசூடிப்பிரபிவிப்பிரானேயன்றி சங்காரருத்திராதியோரல்ல. ஆகவே வே

தவேதாங்கங்களை முறைப்படி கற்றுணர்ந்து அவற்றில்கூறப்பட்டுள்ள கருமங்களையனுஷ்டித்து அதனால் சித்தம் தூய்மை பெற்று பிரணவயோகத்திலுதித்தான் பின்னேவிட்டால் அதனையேபற்றி கானகம்கடக்கக்கையிலேந்திய கொள்ளியைப்போல் எல்லாவற்றையும் விட்டு பரசிவன் திருவடிகளில் பேரன்புற்று ஸ்ரீமன்னாராயணகருணாபலத்தால் அவனருளைப்பெற்று ஜீவன்முக்தனாய் தாமியற்றியநித்யசிவபூஜையின் பயனை விதேககைவல்யத்தைப்பெறுவானாய் ப்ரம்மலோகத்தை த்யானித்து பிராரப்த தேகசரீரம் உள்ளவரை சிவாராதனமாத்திரமே செட்டையாய்ப் பெற்றிருப்பவனே பிரணவநாதோபாஸந சித்தனான மகாயோகியாம் என்பது சொல்லப்பட்டது.

அவதரணிகை

இங்ஙனம் எல்லாவகைச்சாஸ்திரங்களை விட்டவித்யாச்சிரமிக்குப் பிரணவமட்டில் வேருமாய் அவஸ்யமோ அதையும் விடக்கூடாதோ என்றவினாவை எதிர்பார்த்து விடையளிப்பாராய் அப்பிரணவமும் ஓர் அவஸ்தைவரையேபயன்படும் அதற்குமேல இல்லையென்கின்றார்.

தாவத் ரதேந கந்தவ்யம்
யாவத் ரதபதி ஸ்திதம் |
ஸ்தித்வா ரதபதிஸ்தாநம் |
ரதமுத்ஸ்ருஜ்ய கச்சதி || என்று ||௩||

(இ—ள்.) எதுவரையில் ரதம் வழியில் செல்லும் அதுவரையில் ரதத்தாலே போகலாம். (பின்பு அங்கே) இருப்பவன் ரதத்தைவிட்டு ரதபதியின் ஸ்தானத்தையடைவான். எ—று.

(வி—ரை.) ரதம் = முதலில் நிரூபிக்கப்பட்ட பிரணவரதம்; எதுவரை = சப்தப்பிரபஞ்சார்த்தப்பிரபஞ்சங்களின் தோற்றமுள்ள ஸாலம்பயோகம்வரையில் "வழியில்" ஓர் ஆசிரயத்தில் = பற்றில் செல்லும். அதுவரை ரதத்தாலே = முற்கூறப்பட்ட பிரணவமந்திரத்தாலே; போகலாம் = போகக்கூடும், அதன்பிறகு அம

ன்ஸ்கம் எனப்படும் நிராலம்பயோகத்தில் அதுகூடாதாதலால். இருப்பவன் = எவன் அமனஸ்கயோகசித்தியைப்பெறுவான் அவன்; ரதத்தை = முற்கூறியவிலக்கணமுடையபிரணவரதத்தை; விட்டு = மறந்து; ரதபதியின்ஸ்தானத்தை = ரதமாகியபிரணவத்தின் நாயகனதிடத்தை; அதாவது பிரணவவாச்யனாதலால் அக்ஷரம் அகாரசிகை முதலிய இடங்களில் பிரணவமென்றுபசரிக்கப்பட்ட ஸ்ரீபரமேசுவரனே இங்கு ரதிபதி எனப்பட்டானாதலால் அந்தவமனஸ்கயோகி அவ்விஸ்தானத்தை மௌனஸமாதியால் பெறுவான் என்றதாயிற்று. ரதபதி என்றது சிவனை. ஸ்ரீ ருத்திரசங்கிதையில், "ரதி-என்றும், ரதம்என்றும், ரதபதி என்றும் சிவன்பெயர்கள் எடுத்து வழங்கப்படுதலால் என்க. பிரணவபீடஸ்தானமும் அண்டத்தில் ஸோமலோகமும் பிண்டத்தில் "துவாதசாந்தமும் மகாசிதம்பரமுமாம்.

அவதாரிகை

இனி பரோக்ஷமாகிய விஷயத்தில் சத்தப்பிரமாணமே இருந்ததாகையால் அச்சத்தத்தினாலேயே அறியப்பட்டபிரமத்தினிடம் அச்சத்தத்தைவிட்டுச்செல்லுதல் என்பதுங்கூடாதகாரியமாகவே அவ்விதசப்தத்யாகியின்கதி நிராச்ரயமாகாதோவென்ற பூர்வபக்ஷம்நிகழ, அதனைமறுத்தோதுகின்றார்.

மாத்ராலிங்கபதம் த்யக்த்வா
ஶப்தவ்யஞ்ஜநவர்ஜிதம் |
அஸ்வரேண மகாரேண
பதம் ஸூக்ஷ்மம் ச கச்சதி || என்று [௫]

(இ—ள்) மாத்திரை இலிங்கம், பதம்; இவைகளைவிட்டு சப்தம் வியஞ்சனம் இவைகளில்லாமல் சுரமில்லாததான மகாரத்தாலே ஸூக்ஷ்மமான பதத்தை யடைவான்.

(வி—ரை.) மாத்திரை = அளவு. அதாவது நாதத்தின் பரிமாணம், அப்படியென்றால் ஓர்வகைகாலம் இதனால் பிரமாணங்களெல்லாம் குறிக்கப்பட்டது. இலிங்கம் = குறி. ஆன்மாவினறிவு = அ

ப்படியென்றால்அறிவுடையபிரமாதா சொல்லப்பட்டான் என்க. பதம்=அடையத்தக்கது. அப்படியென்றால் பிரமேயமெல்லாம் சொன்னதாயிற்று. இவற்றால்பிரமாணம் பிரமாதா பிரமேயம் என்ற திரிபுடி எடுக்கப்பட்டது. அல்லது 'மாத்திரை' இசையின் அம்சம்=சொற்களின் அளவு; லிங்கம்=ஆண்பால பெண்பாலொன்றன்பால் என்றபாற்பாகுபாடு;பதம்=ஓர்பொருளுணர்த்துமியல்பு. அப்படியென்றால் ஒவ்வொரு சொல்லுக்கும் ஓர்அளவும்ஓர் பாலும் ஓர்பொருளும் உண்டு. அவைகள்பிரணவத்துக்கு முண்டாக்கூடுமாகவே அதற்கும் மாத்திரை இரண்டின்மேல் ஒரசைச்சேர்ந்த லளவும். லிங்கம்-மூன்றனுள்ஒன்றேனும் அல்லது அவ்யயமாயினும் பதம் நாமம் என்றபாகுபாடும் உண்டு. அவற்றைவிட்டு =என்றால் அளவைகளுக்குட் பட்டதும் ஆண்பெண் அலிஎனறவியவகாரத்துக்குட்பட்டதும் வினைமுதலாயாதல வினையாயாதல் வேறு எவ்வகையிலும் ஒருசொற்குப் பொருளாகும்பலபுடையதாகபிரம்மத்தைதியானிக்காது உல்லெலாம் கடந்துண்மை மாத்திரையாய் நினைத்து என்பதுகருத்து. இவ்வனமாயின் ஈந்தச்சொல்லால் ஈசனைவழிபடுவதெனிற் காட்டுகின்றார் சப்த ஏனபதாதியால். சப்தவ்யஞ்சனங்கள். சப்தம்=உயிரெழுத்து; வியஞ்சனம்=மெய்யெழுத்து: இருவகையே ஒலியெழுத்தெல்லாமாகும் இவற்றுள் ஒலியெழுத்துகளுள்சில தனியேயொலிக்குமியல்பின-அவற்றையே யுயிரெழுத்தென்பார்கள். அவ்வுயிருடனே சேர்ந்தொலிப்பனபல அவைமெய்யெழுத்துக்கள். பிரணவத்தில்முன்னர் இரண்டுமாத்திரைகள் உயிர்மேலே அரைமாத்திரைவியஞ்சனம் இவ்விருவகை விபாகத்தைவிட்டு இவ்விதப்பாகுபாடு ஏதேனுமதனிடம் இல்லை எனதியானித்து. அப்படியானால் இவன்புத்திக்கும் அச்சமயம் ஏதுமேதோன்றும் எனில் யோகிகளின் அநுபவத்தைக்குறிக்கின்றார் சுரமில்லாதஎன்பதாதியால். சுரம்=நாதம் உச்சாரணத்துக்கு ஏதுவானஒலி அது இல்லாது குறிக்குமொலியின்மையால் தியானமென்ற மனோவிர்த்திக்குமட்டும் உபயோகமாகுமாறு;மகாரத்தாலே=விந்துமாத்திரையாலே, விந்துவைக்குறிப்பது மகாரம். மேலும் அதன்மேலுள்ள அர்த்தமாத்திரைக்கும், அதுவே குறிப்பாதலால் ருத்திரனையும் ஸ்ரீபரமேசுரனையும்குறிக்கும். இருகுறிகளும் மகாரமென்ற ஒரு

சொல்லால் எடுக்கப்பட்டன. ஸூக்ஷ்மமான = மனம்லயிக்காத வரை யடையக்கூடாததான; பதத்தை = உத்தமமான ஸ்ரீகைலாச பத்தை யல்லது மகாசிதம்பரத்தை யல்லது நிருபாதிகப்பிரம்ம சொரூபத்தை; அடைவான் = சொரூபமாகப்பெறுவான் என்பது. இதனால் வாக்கும்மனமும் எட்டும்வரை ஓங்காரரதமும் அதன ப்புறத்தே கேவலம் தியானமும் சுழுத்திஸ்தான ருத்ரவுபாஸ்தி யும் மேல் மும்மூர்த்திகளும் கடந்த முழுமுதற்கடவுள் கண்ணுதல் வள்ளல் துரீய மூர்த்திசேவையும இட்டும். பிறகு அதுவும் ஒழிய அவனேதானாய் நிற்கும் அற்புதமென்ன நிஷ்டைகைகூடும் என் பது கிடைத்தது. "நதத்ர ரதா ந ரதயோகா ந பந்தானோ பவந்தி அத ரதாந் ரதயோகாந் பத: ஸ்ருஜதே = அங்கு ரதங்கள் ரதங்களின்யோகங்கள் வழிகள் இல்லையாயினு ம் இனி ரதங்களையும் ரதயோகங்களையும் வழிகளையும் சிருஷ்டி க்கின்றான்' என்று வேதங்கள் கூறிய சொற்பனத்துக்குமேற் பட்டவஸ்தைகள் இங்கு நிரூபிக்கப்பட்டன வென்பதும் கருத் தேயாகலாம். அதனற்றான் மாண்டூக்யம் ஸ்பஷ்டமாய் 'அத்ருஷ்ட மவ்யவஹார்யம் = காணக்கூடாதது விவகரிக்கமுடியாதது" என்று துரியசிவநிலையைக்குறித்தது.

அவதாரணிகை

இனி எதனால் மனோவிலயம் உண்டாம்? கன்மங்கழலும்? பர மேசுவரனிடம் அனுக்கிரகோபாஸ்திகூட வீடுகைகூடும்? அவ்வுபா யம்யாது எனச் சீடருக்குச் சங்கைநிகழ, அச்சங்கையை ஓட்டு கின்றார்.

ஶப்தாதிவிஷயாந் பஞ்ச
மநஶ்சைவாதிசஞ்சலம் |
சிந்தயேதாத்மநோ ரஶ்மீந்
ப்ரத்யாஹார: ஸ உச்யதே || [௫] என்று

(இ—ள்.) சப்தாதிவிஷயங்களான ஐந்தையும் அதி சஞ்சலமானமனதையும் ஆத்மாவின் கயிறுகளாக நினைப்ப தேப்ரத்யாகாரமாம் எனச்சொல்லப்படுகிறது. எ—து.

(வி—ரை) சப்தாதிவிஷயங்கள்=சப்தம் பரிசம் ரூபம் இரசம் கந்தம் இவைகளை விஷயமாயுடையன. சப்தாதி விஷயங்கள்= அன்மொழித்தொகையாம். அங்ஙனமாயின் இந்திரியங்களென்பது பொருள். அவை ஐந்து என்றது ஞானேந்திரியம் ஞானேந்திரியங்களால் அறியப்பட்ட விஷயங்களிலேயே கர்மேந்திரியங்கள் பிரவேசிக்குமாதலால ஞானேந்திரியநிக்கிரகமே முக்கியமாகக்கொள்ளப்பட்டது. "அதிசஞ்சலமான மனதையும்" அதிசஞ்சலமான இந்திரியங்களின் வழியில் எப்படியும் ஆன்மாவையிழுத்துவிடும் இயல்புடைய மனத்தத்துவத்தையும் 'ஆத்மாவுக்கு'= சோபாதிகனான ஜீவனுக்கு; 'கயிறுகளாக'= பந்தரூபமாகவிணைப்பட்டதே= நியமிப்பட்டதே பெரியதோர் பிரத்யாகாரமாம= பிரத்யாகாரம் எனப்படும் யோகாங்கமாம். யோகாங்கங்கள் எட்டனுள் பிரத்யாஹாரமும் பிராணாயாமமும் மிகச்சிறந்ததாகையால் அதனைக் குறிப்பாய் எடுத்து யோகத்தையே மனோஜயோபாயமாகக் குறித்தாரென்க. இதனால்= அஷ்டாங்கயோகத்தால் மனோநிக்ரகஞ்செய்து பரசிவோபாஸ்திசெய்யும் புண்ணியசீலனுக்கு சாக்ஷாத்லக்ஷ்மணனுளன் திருவுபதேசத்தால் தாரகப் பிரம்மவித்தை கிடைக்கும். அதன்வழியே ஸவிசேஷாபரோக்ஷம் உண்டாகும் பிறகு அந்த ஸவிசேஷப்ரம்மகிருபையாலேயே நிர்விசேஷாபரோக்ஷம் பிறக்கும். பிறந்தால் அதுவே பரமபதமாம் என்றது காட்டப்பட்டது;

அவதாரணிகை

இனி கேவலமான ப்ரத்தியாஹாரம் கூடாதுபற்றி அறுவகையங்கங்களுடன் கூடிய யோகத்தையே நிரூபிக்கின்றார்-

ப்ரத்யாஹாரஸ்ததா த்⁴யானம்
ப்ராணாயாமோ(அ)த² தா⁴ரணா
தர்கஶ்சைவ ஸமாதி⁴ஶ்ச
ஷட³ங்கோ³ யோக³ உச்யதே ||௬||

என்று

(இ—ள்) பிரத்யாஹாரம், தியானம், பிராணாயாமம், தாரணை, தர்க்கம், சமாதி என்ற ஆறு அங்கங்களுடையது யோகமாம்.

எ—று

(வி — ரை.) இங்கு யோகங்கள் ஆறு என்று எடுக்கப்பட்டது. சிலவிடத்தில் பஞ்சாங்கம் என்று சொல்லப்பட்டது. பலவிடங்களில் அஷ்டாங்கம் எனப்படுகின்றது. இவைகள் ஒன்றுக்கொன்று முரணுவழியேது எனில் கூறுதும். சில உத்தமாதிகாரிகளிடத்தில் சிலவகையங்கங்கள் அனாவசியம் என்பதே யவற்றின் கருத்தாகையால் ஒன்றுக்கொன்று விரோதமில்லையெனக. ஆதலால யோகத்துக்கு அஷ்டாங்கத்துவ சித்தாந்தபங்கம் நேர்கிலதென்க. மேலும் இங்கு முறையும் அவசியமன்று பிராணாயாமப்பிரத்யாஹாரதாரணாத்யானஸமாதிகளுக்கு ஒன்றன்மேல் மற்றொன்றின் அமைப்புஸர்வயோகசாஸ்திர சம்மதமாதலால் என்க. தர்க்கம் என்பது சித்தாந்த சிரவணம் என்றநியமமாதலால் அதையும் சேர்த்து ஆறு அங்கங்கள் குறிக்கப்பட்டன. மிகுந்த இயமம் ஆசனம் இவ்விரண்டு அங்கங்களும் உத்தமசிவயோகிக்கவ்வளவாக அவசியமல்லவென்பது கருத்து- கச்சம்ஸ்திஷ்டன்ஸ்வபஞ்ஜாக்ரத் ஸதா ஶிவமயம் சித்தம் ஸ ஶிவஸ்ஸ ஹி ஶிவவித்- நடப்பினும் இருப்பினும் விழிப்பினும் துயிலினும் என்றுமே எவன் மனம் சிவமயமாய் விடும் அவன் சிவன் அவனறியென வறிந்திடாய்மேலோய் என்றுபுராணங்கூறியவாறு எவ்வவத்தைகளிலும் சிவமயபாவனை நிறைந்த வுத்தமனுக்கு என்றும் ஆசனம் இயமம் இவைவேண்டப்படமாட்டாவாம்-வேறுஎந்தவங்கத்தைக்குறைத்தாலும் சேர்த்தாலும் இவ்வங்கங்கள் மிக்கச்சிறந்தனவென்பதுகருத்தாம். ஆகவே ஆறங்கங்களுள் பிரத்யாஹாரத்தை முன்னிட்டு யோகம்மனோஜயவுபாயமாய் இந்த சாஸதிரத்தில் நிரூபிக்கப்படுமென்பதுமுடிந்ததாத்பரியம்.

அவதரணிகை

இனி எந்தயோகத்திலும் முக்கியமான பிராணாயாமத்தை நிரூபிப்பாராய் அதனைப்புகழ்கின்றார்-

யதாபர்வததாதூநாம் |
தஹ்யந்தே தாதவோ மலா: ||
ததேந்த்ரியக்ருதா தோஷா: |
தஹ்யந்தே ப்ராணநிக்ரஹாத் || எ || என்று

(இ—ள்) எப்படி அக்கினிபுடத்தால் பர்வததாதுக்களின் மலங்கள் கொளுத்தப்படுகின்றனவோ, அப்படியே இந்திரியங்களால் நேர்ந்ததோஷங்கள் பிராணாயாமத்தால் கொளுத்தப்படும். எ—று.

(வி—ரை) பர்வததாதுக்கள் = சுவர்ணம் முதலியன எங்ஙனம் அணுவணுவாய் சிதறுண்டுகிடக்கும். சுவர்ணவணுக்கள் அக்னிபுடபாகத்தால் சம்பிரதாயம் அறிந்தவனால் புழுதிமுதலிய மலங்களைவிட்டு உயர்ந்தபொன்னும் அப்படி என்பது தாத்பரியம். இந்திரியங்களால் நேர்ந்ததோஷங்கள் = மனமுதலிய இந்திரியங்களால் நேர்ந்தபரஸ்திரீதரிசனுதிக்குற்றங்கள்; கொளுத்தப்படுகின்றன. புடம் போடுதல் என்பது அவைகளில் உடனிகழ்ந்தமலத்தைத் துலக்குமியல்புள்ள மூலிகை முதலியவற்றுடன் கலந்தேவென்று பொருள் கொள்ள வேண்டும். அங்ஙனமாயின், அவ்விதமான புடமே உலகத்தில் தாதுக்களைச்சோதிப்பதாகக்காணப்படுதலால் பர்வததாதுக்கள் என்றது உபலக்ஷணம் எந்ததாதுக்களுமே அதன்பொருளே. பர்வதங்களில் அவை யதிகமாய் கிடைக்கக்கூடியனவாதலால் அங்ஙனம் சொல்வாராயினர். இதனை சிறப்புணர்ச்சிக் குறித்தாரென்பர்.

அவதரணிகை.

இனி இறுதியில் தர்க்கம் சமாதி இரண்டின் பயனைப்பற்றி நன்குரைக்கப்போவதால் முன்னரே பிராணாயமாதிநான்கின் பயன்களைப்பற்றி நிரூபிக்கின்றார்.

ப்ராணாயாமைர்தஹேத்தோஷாந்
தாரணாபிஸ்ச கில்பிஷம்
ப்ரத்யாஹாரேண ஸம்ஸர்காந்
த்யாநேநாநீஸ்வராந்குணாந். ||அ|| என்று

(இ—ள்) பிராணாயாமங்களால் தோஷங்களைக்கொளுத்தவேண்டும். தாரணைகளால் பாபத்தைக்கொளுத்தவேண்டும். பிரத்யாஹாரங்களால் விஷயங்களின்

யும், தியானத்தால் அநீசுவரகுணங்களையும் நிவிர்த்திக்க வேண்டும்." எ—ஆ.

(வி—ரை) பிராணாயாமபிரத்யாஹார தாரணைகளைத்தனித் தனியே பன்மையாலும் தியானத்தையொருமையாலும் நிரூபித்தசுருதியின் கருத்துயாதெனில் தியானம் ஒன்று நீங்க மற்றயோகங்கள் பலவகைப்பட்டன வென்பதேயாம். தோஷங்கள்=சரீரத்துள்ள வாதபித்தகபங்கள் கொளுத்தவேண்டும்=நிவிர்த்திக்கச்செய்யவேண்டும்; தோஷங்கள்=மலமூத்திராதிகள் என்று பொருள் கொள்ளலாம். பிராணாயாமசித்தியுண்டானால் நல்லமணமும்மலமூத்திரங்களின் சுருக்கமும் உண்டாமெனசுவேதாசுவதரவுபனிடதம் கூறுகின்றமையால் என்க. தாரணைகளால்=மூர்த்திவிசேஷதாரணைகளால்; அவைஐவகைப்பட்டனவாம் எனபலஉபநிடதங்களும்யோகநூல்கள் ஏனையவைகளும் சொல்லுகின்றன பாபத்தை=அநேகரோகாதி ஏதுவானபாபத்தை பிரத்யாஹாரங்களால்=முற்கூறியபடி மனமுதலியவிந்திரியங்களை நிக்கிரகிக்கும் வழியால். அதுஐவகை எனவும் வேறுசிலவகைஎனவும் பல்லுபநிடதங்களும் வேறுசிலயோகநூல்களும்குறிக்கின்றன; ஸம்சர்க்கங்கள்=பாவநூக்கள்=அசத்துக்களின் சகவாசம்முதலியன அநாவதுவிஷயவாசனைகளா:; தியானத்தால்=அவனேதானென்ற நிரந்தரதியானத்தால் அநீசுவரகுணங்களையும்=அநீசுவரன் ஜீவன் அவனது குணங்கள்=கர்த்திருத்துவம் போக்திருத்துவம் முதலியனவாம்பல; பந்தஹேதுக்கள்= தேகாதிபிரபஞ்சவாசனைகளேயவையாம்=கொளுத்தவேண்டும் என்பது ஒருமுறைபடிக்கப்படினும் அதைப்பலவிடங்களிலும் சேர்த்து முடித்துக்கொள்ளவேண்டும் அநீசுவரகுணங்கள் அலேபமே பரமேசுவரகுணங்கள்பலதோன்றுமாயினும் அவைகளும் சமாதியில் துலேந்திடுமென்க.

அவதாரணிகை

இனி ஓர்பகுதியால் சமாதியைக்குறிக்கின்றார்.

கில்விஷஂஹிக்ஷபஂநீத்வா

ரஂஹிரசெஞ்வஷிஞயெஞ. ॥அஉ॥ எ—ஆ

(இ — ள்) பாபத்தையும் ஒழித்து குசிரத்தையும் சிந்திக்கவேண்டும். எ — று.

(வி—ரை) பாபத்தை= முன்மந்திரத்திலேயே பாபத்தை நிரூபித்தோம் க்ஷயமடையச்செய்தென்று மூலத்தில் உள்ளதன் பொருளே ஒழித்தென்றுஉரையிடப்பட்டது. தாரணைகளால் தொலைத்தென்பதுகருத்து;குசிரத்தையும் =என்றும்விரும்பத்தக்கசொரூபமான ஆன்மசொரூபத்தையும்; உபமையால்பரமாத்துமசொரூபத்தையும்சேர்த்து அபேதமாய் சிந்திக்கவேண்டும் = தியானிக்கவேண்டும்; இங்ஙனம் அத்துவிதமாக இடையறாது அவிச்சின்னத் தைலதாரையைப்போல் தியானிப்பதே சமாதியாம் என்பதுகருத்து. இந்த சமாதியின் பயன் யாதெனில் மோக்ஷக்கேதுவான பாபம் தொலைந்தமையால் மோக்ஷியற்று வீடுபெறுதலேயாம்.

அவதாரணிகை

இனி பிராணாயாமாதிகளைக் குறித்தோதுவாராய் முதலில் பிராணாயாமத்தின் இலக்கணத்தையும் சொரூபத்தையும்நிரூபிக்கின்றார்.

ஈ-விரம்ரேசகஞ்சைவ
வாயோராகஷ-்ணஞ்சய |
ப்ராணாயாமாஸ்த்ரயஃப்ரோக்தாஃ
ரேசபூரககும்பகாஃ||கூ,உ|| என்று,

(இ—ள்) குசிரம் ரேசகம் வாயுவை (உள்ளேசெலுத்துதல்)ஆகர்ஷித்தல் இம்மூன்றும் ரேசக பூரக கும்பகங்களென்ற பிராணாயாமமாம். எ — று

(வி—ரை.) குசிரம் என்பது கும்பகத்துக்கோர்பெயர்; வாயுவைஆகர்ஷித்தல் பூரகம் இவைகளின்பெயரையே ஈற்றிற்கூறுகின்றார் ரேசகம், என்பதாதியால். ரேசகம் பூரகம் கும்பகம் இம்மூன்றும்தனித்தனியே பிராணாயாமமாகாது. மற்றுமூன்றும் சேர்ந்தே ஒருப்பிராணாயாமம் என்று நிரூபித்தற்கே பிராணாயாமம் என ஒருமைவகுத்தாரென்க.

அவதாரிகை

இனி ரேசகபூரககும்பகங்களின் அளவைக் குறிக்கின்றார்.

ஸவ்யாஹ்ருதிம் ஸப்ரணவாம்
காயத்ரீம் ஶிரஸா ஸஹ |
த்ரி: படேதாயதப்ராண:
ப்ராணாயாம: ஸ உச்யதே ||௰|| என்று

(இ—ள்) வியாஹிருதிகளுடனும்பிரணவத்துடனும் காயத்திரியைச் சேர்த்துமேலே காயத்திரிசிரஸையும் சேர்த்து மூன்றுமுறை பிராணனையடக்கி ஜபிப்பானாகில் அதுவே பிராணாயாமம் எனப்படும். எ—று

(வி—ரை) இப்பொழுது பிராணாயாமத்துக்காக சிஷ்டர்கள் உபயோகிக்கும் மந்திரமேயிதுவாம். இதில் காயத்ரியுடன் முன்னும்பின்னும் இருபகுதிகள் இருப்பதால் அப்பியாஸதசையில் முதற்பகுதி ரேசகம் இரண்டு பூரகம் மூன்று கும்பகம் என்று. பிறகு ஒருபூர்ணமந்திரத்தளவு ரேசகம் ஒரு மந்திரத்தளவு பூரகம் ஒரு மந்திரத்தளவு கும்பகம் என்றும் பின்புமூன்றுமந்திரத்தளவு ரேசகம் மூன்றுமந்திரத்தளவு பூரகம் மூன்றுமந்திரத்தளவு கும்பகம் என்றும் விருத்திசெய்யவேண்டும் என்பதாயிற்று. இதற்குமேலும் மிகும் பிராணாயாமத்தின் அளவிருப்பினும் சுருதிகளுதவியால் மத்யபரிமாணத்தைக் குறித்ததாமென்க.

அவதாரிகை

இனி ரேசகம் பூரகம் கும்பகம் இவற்றின் இலக்கணங்களை மூன்றுமந்திரங்களால் காட்டுகின்றார்.

உத்க்ஷிப்ய வாயுமாகாஶம்
ஶூந்யம் க்ருத்வா நிராத்மகம் |
ஶூந்யபாவே நியுஞ்ஜீயாத்
ரேசகஸ்யேதி லக்ஷணம் ||௧௧|| [illegible]

வக்த்ரேணோத்பலநாலேந
தோயமாகர்ஷயேந்நர: |
ஏவம் வாயுர்க்ருஹீதவ்ய:
பூரகஸ்ய து லக்ஷணம் ||௧௨|| என்றும்

நோச்ச்வஸேந்ந நிச்ச்வஸேத்
நைவ காத்ராணி சாலயேத் |
ஏவம் பாவம் நியுஞ்ஜீயாத்
கும்பகஸ்ய து லக்ஷணம் ||௧௩|| என்றும்

(இ—ள்) ஆகாசத்திலிருந்து வாயுவைக்கிளப்பி சூன்யமாக்கி நிராத்மகமாகச்செய்து சூன்யமானபாவத்தில் சேர்த்தால் அதுவே ரேசகலக்ஷணமாம். என்றும்

ஒருதாமரைத்தண்டை வாயில் வைத்து அதன்வழி தண்ணீரை உறிஞ்சுவதுபோல வாயுவை உள்ளே இழுப்பது பூரகத்தின் இலக்கணமாம்.' என்பதும்

உச்சுவாஸம் நிசுவாஸம் இரண்டுமில்லாது சரீரத்தையும் அசைக்காது இவ்விதநிலையில் இருப்பது கும்பகத்தின் இலக்கணமாம். என்பதுமாம்.

(வி—ரை.) ஆகாயத்திலிருந்து=சரீரத்துள்ளமைந்த சுவாஸசஞ்சாரயோக்யமான வெளியிலிருந்து; வாயுவை=பிராணவாயுவை; கிளப்பி=வெளியேற்றி; சூன்யமாக்கி= அந்தவிடத்தை காற்றில்லாததாகச்செய்து; நிராத்மகமாக்கி=வாயுவின் ஆத்மாவெனப்படும் சொரூபம் அசைவு பரிசம் முதலியனவே யாதலால் அவைகள் ஏதுமில்லாத நிலையின்சேர்த்து. சூன்யபாவத்தில்=சூன்யமான அந்தகாரணவாகாசத்தில்சேர்த்தால்அந்தக்காரணத்தையமைத்து காரணரூபமாகவே காரியமானவாயுவைக்கண்டால் அதுவே ரேசகலக்ஷணமாம் என்பதால் பிராணாயாமத்தில் ரேசகப்பகுதி நிரூபிக்கப்பட்டது. மேலே ஒருதாமரை என்பதாதியால் பூரகத்தைநிரூபிக்கின்றார், தாமரைத்தண்டு ஒன்றையெடுத்து

வாயில் வைத்து அதன்வழி தண்ணீரைக்குழந்தைகள் விளையாட்டாக உட்கொள்வார்கள். அப்படிசெய்தால் அந்தஜலம் கலங்கியும்வேறுவிதத்தில் கெடுதியடைந்திருந்தாலும் அந்தத்தாமரைக்காடையின் செல்வதால் சுத்தமாய் உள்ளேபோகும். அதுபோல சிவாலயம் நதிதீரம் வில்வத்தடிமுதலிய விடங்களில் உட்கார்ந்து வெளியில் மலமும் கலந்துநின்ற காத்தினிடத்தேயிருந்து நல்ல காற்றையுட்செல்லச்செய்வதும் பாதம்வரை=சரீரம்கண்டவரை பூர்த்திசெய்வதும் பூரகமாம். இதனால் ரேசகத்தால் உள்ளேயுள்ளமலங்கள் வெளியேற பூரகத்தால் அவ்விடத்தில் வெளியினின்று நல்லகாற்று மட்டில் உள்ளேசேர்க்கப்படுவதால் சரீரத்துக்கு பயோகமளவிறந்ததாம். மேலே கும்பகத்தைநிரூபிக்கின்றார். 'உச்சுவாஸம்' என்பதாதியால், உச்சுவாஸம்=வெளியிற் பிராணவாயுவை நடத்துவது; நிச்சுவாஸம்=உள்ளேயிழுப்பது. இரண்டுமில்லாது=இரண்டையும்நிறுத்தி; சரீரத்தையும் அசைக்காது= சரீரத்தில் இந்த அப்பியாசம் புதிதாகத்தோன்றும்போது ஓர்வகையசைவுண்டாகும் அதுவாயுவை குறித்தவிடம் செல்லவொட்டாதுதடுக்கும். ஆகையால், அதற்கிடம் கொடாது வழக்கம் செய்யவேண்டுமென்பது சுருதியின்கருத்து; இவ்விதநிலையில்= வாயுபரிபூர்ணாவஸ்தையில்; இருப்பது=சரீரத்தையமைப்பது; கும்பகமாம்=இதுவே முக்யப்பிராணாயாமமாம். இதனைச் சாதித்தற்காகவே மற்ற விரண்டு அங்கங்கள் கொள்ளப் படுமென்க; அதனாற்றான், இதனையிறுதியில் வைத்தாரென்க. நிற்க, உச்சுவாசம்செய்தால்ரேசகமாய்விடும். நிச்சுவாசம் செய்தால் பூரகமாகும் சரீரத்தையசைத்தால் தாம்கருதியபடி ஆசனாதிகள் தில்லாதுநிலையுமாகவே பிராணன் சுழிமுனையைவிட்டு வேறுநாடிகளில் நுழைந்துரோகவேதுவாம். சுழிமுனையிற் பிரவேசியாதொழிந்தமையால் இஷ்டமும் சித்திக்காது. அதற்காகவே இருவகையும் சொல்லப்பட்டதென்க இங்ஙனமிருக்க இந்தவசனங்களின் அமைப்புக்கேற்றபடி பொருட்படுத்தாது புறட்டி ஏதேதோ தொடர்பற்ற பொருள்களை இவ்வசனங்களுக்கெழுதி நாராயணபட்டர் இடர்ப்பட்டார். ஸ்ரீ குருசங்கரானந்த மூர்த்திகளோ நேராகவே பொருளிட்டருளினர். ஆகவே முன்னர் அவர்பாடத்தைஎற்கா ஆசிரியர் பாடத்தையும் பொருளையுமே தழுவி யாம் உரையிட்டோமென்க.

அவதாரணிகை

இனி த்யானவிலக்கணம் கூறப்படுகிறது.

அந்த⁴வத்பஶ்யதி ரூபாணி
ஶப்³த³ம் ப³தி⁴ரவச்ச்²ருணோதி |
காஷ்ட²வத்பஶ்யதி தே³ஹம்
ப்ரஶாந்தஸ்யேதி லக்ஷணம் ||௧௬|| என்று

(இ—ள்) குருடனைப்போல் ரூபங்களைப் பார்ப்பான் செவிடனைப்போல் சப்தங்களைக்கேட்பான், கட்டையைப் போல் சரீரத்தைப்பார்ப்பான். இதுவே சாந்தியைமிகவும் அடைந்தவனுக்கு லக்ஷணமாம். எ—று.

(வி—ரை) எப்படி ஒருகுருடன் உருவங்களைக்காணும்படி அவைமுன்னிலைப்படினும் அவற்றைக்காணான் = அவற்றைவிரும்பான்? எங்ஙனம்ஒருசெவிடன் சங்கீதம் = காதலிகளின்சிறுமொழிமுதலியசப்தங்கள் முன்னிலைப்பட்டுக்கேட்கநேரிடினும் அவற்றைக்கேட்கமாட்டான் = கேட்கானமயானே விரும்பான். எப்படியெனும் கட்டைமுதலிய உதாசினப்பொருள்களைத் தான் எனமயங்கான்; அபிமானிக்கமாட்டான் அதனிடத்து பெரும்பற்றைவைக்கமாட்டான். அப்படி நல்லரூபங்களைக்கண்டாலும் காணுதவனாய் பற்றற்றவனாய் நல்லசப்தங்களைக்கேட்டாலும் கேளாதவனாய்பற்றற்றவனாய் நல்ல சரீரமுடையவனாயினும் அதனைக் கட்டைபோல் எண்ணியதனிடம் பற்றற்றவனாய் நிற்பானாயின் அதுவே எல்லாவிதப்புலன்களுநம் ஒடுங்கியநிலையினிலக்கணமாதலால் அதுவே தியானமெனப்படும் என்பதிதன் கருத்து.

அவதாரணிகை

இனி தாரணையை நிரூபிக்கின்றார்.

[illegible]
[illegible] |

தாரயித்வா ததாத்மாநம்
தாரணா பரிகீர்த்திதா ॥ கரு ॥ என்று

(இ—ள்) மனதுசங்கற்பரூபம் என்றறிந்து ஆத்மா விடத்துச் சங்கற்பித்து ஆத்துமாவை மட்டில் தனித்து தாரணை செய்பவன் எவனோ அவனே புத்திமானுன தாரணை யுடையவன். எ—று:

(வி—ரை) என்றும் மனத்திற்குச் சங்கற்பமின்றிவேறு உருவம் இல்லாமையால் சங்கற்பம் உள்ளவரை மனமொழியாது இந்திரியசம்பந்தம் உள்ளவரை சங்கற்பம் ஒழியாதென்றறிந்து, சொரூபமாத்திரமான சைதன்யத்திடத்தே அம்மனதை வெளிவிஷயங்களிடமனுகாவண்ணம் செய்துசெலுத்தி, அவ்வான்மமயமாகவே அதனைநிருத்திடமாய் நிற்பதே தாரணையாம் என்பது இவ் வசனத்தின் முடிந்த கருத்து.

அவதாரணிகை

பிறகு முதலில் குறிக்கப்பட்டவைகளில் எஞ்சியதர்க்க சமாதிகளைக்குறிக்கின்றார்.

ஆகமஸ்யாவிரோதேந
ஊஹநம் தர்க்க உச்யதே ।
ஸமம் மந்யேத யம் லப்த்வா
ஸ ஸமாதி: ப்ரகீர்த்தித: ॥ கசு ॥ என்று.

(இ—ள்) ஆகமங்களுக்கு விரோதமில்லாமல் ஊகிப்பதே தர்க்கமாம். எதையடைந்தவன் எல்லாவற்றையும் சமமாக நினைப்பானே அதுவே சமாதியாம் எனப்படும். எ-று

(வி—ரை) ஆகமங்கள் = வேதங்கள் வேதங்களுக்குவிரோதமின்றிஊகித்தலேதர்க்கமன்றிகௌதமவித்தைமுதலியவையல்ல. பரோக்ஷமானசூக்ஷுமவிஷயங்களில் வேதசப்தங்களே பிரமாணங்களாதலால் பிரகரணத்தால் ஆகமமென்ற சொல்வேதபரமேயன்றிதர்நி

ரபரமல்ல. விசேஷமாய் வேதவேதாங்கங்களில் ஆகமசப்தம்வேதங்களின் பெயராகவேஉபயோகப்படுமென்றி வேறுபாசுபதம் பாஞ்சராத்திரம் புத்தாகமம் முதலியவற்றின் பெயராகவழங்குவதில்லை. இங்குவேதவாக்கியப் பிரகரணத்தில் வேதங்களுக்குரிய பொருளேகொள்ளவேண்டுமாகவே அங்ஙனம் பொருள்படுத்தினோம் என்க. மேலேசர்வயோகப்பயனும் சமாதியை நிரூபிக்கின்றார். எதைஎன்பதாதியால். எதை = எவ்விதயோகத்தை; அடைந்தவன் = அப்பியசித்தவன்; எல்லாவற்றையும் = ஜடஜீவரூபப்பிரபஞ்சத்தையெல்லாம்சமமாகஒரேபடித்தாக 'ஸர்வபூதஸ்தமாத்மாநம்' எல்லாப்பூதங்களிலும் சமனாய் என்றுகண்ணன், அருளிச்செய்தபடி "நினைப்பான்" அறிந்துநிட்டைபெறுவான்; அதுவே ஸர்வசமரசத்துவாத்துவித நிட்டையே; சமாதியாம் = ஸமாதி யென்றயோகநிலைஎன்றுஆன்றோரால் சொல்லப்படும் என்பது கருத்து. இவ்வளவால் சமாதி என்ற சொல்லின் காரணவாற்றலும் குறிக்கப்பட்டதாயிற்று. சமமாகவெல்லாம் எந்தயோகநிலையால்ஆத்மாவினிடம் அமைக்கப்படுமோ அதுசமாதியாம் - ஸம் - ஆ - தி - என்ற முச்சொற்களின் கூட்டுறவால் பிறந்தது இச்சொல்லென்பது இதனால் பெறப்பட்டது

அவதரணிகை

இனியாஸனமுதலியஏனையவங்கங்களையும்சிலவதிகாரிகளையுத்தேசித்து நிரூபிக்கின்றார்.

ஸமாஸீநஸ்ஸமாஸ்தாய
ஸர்வபூதாஷ்விதைஜிதே
ஸ்வாஸநாஸீநயோகஸ்தம்
ஆத்மநேவாயதீஸ்ஸை ||௧௭.௦|| என்றும்,

யத்கம்ஸ்ஸிதம்வாஜி
ஆத்ரஸநஸ்யாஜிவா
ஸ்யாஸம்வாஸநம்ஸஸ்ரூக்
உத்தாராஜிஸ்வஸ்திஹ ||௧அ.௦|| என்றும்

(இ—ள்) பூமியில் எவ்விததோஷமுமில்லாத விடத்தில் மனஸ்ஸுக்குரமயமான தர்ப்பாஸனத்தில் மனோமயமான ரக்ஷையைச்செய்துவிட்டு ரதத்தையும் மண்டலத்தையும் ஜபித்து வடக்குமுகமாய் : பத்மாஸனம் ஸ்வஸ்திகாஸனம் ஸுகாஸனம் இவைகளில் எதையாவது எடுத்துக்கொண்டு வடக்குமுகமாய் இருந்து (யோகம் செய்யவேண்டும்) எ-று.

(வி—ரை) பூமியில்=ஸமமாய் சுசியாய் உள்ளவிடத்தில்; தர்ப்பாஸனத்தில்=வஸ்திரம்கிருஷ்ணாஜினம்தர்ப்பை இம்மூன்றனுள் முறையேயுடைய வாஸனத்தில்; எவ்விததோஷமுமில்லாத=பர்வதசிகரம் நதீதீரம் பில்வத்தினடி முதலியவிடம் யோகிகளுக்குயோகாநுஷ்டானத்துக்குக்குற்றமற்றதொன்றாம் மனதுக்குரம்யமான=சிவாலயாதிகளில்; இவ்வள்வால் சுக்கான்நெருப்புமணற்குன்றம் முதலியனவாய்வேறுபநிடதங்களில் சொல்லப்பட்ட குற்றங்கள் இல்லாத உத்தமஸ்தானத்தில் என்றது சொல்லப்பட்டது. மனோமயமான ரக்ஷையைச்செய்து=மனோமயமான ரக்ஷைமனதைவசப்படுத்தித்தெளிவாகவைத்திருப்பதேயாம். அதனைச்செய்து=மனோஜயத்தைக்கூடியவனாயென்று; ரதத்தையும்மண்டலத்தையும் ஜபித்து ரதத்தை=பிரணவத்தைமண்டலத்தை= அந்த ரதத்தாலறியற்பாலனவான சிவபதமண்டலத்தை; ஜபித்து=தியானித்து; முன்னர்மனோமயரக்ஷைஎன்றது ஆசிரமம் முதலியவிடங்களையும் குறிக்கும். ரதம் என்பதுரதந்தரசாமம் என்று. மண்டலமென்பது மண்டலப்பிராம்மணம் என்று பொருள் கொள்ளலாம்; வடக்குமுகமாய்=இதுகிழக்குமுகத்துக்குக்குறிப்பே; ஆகவேகீழ்அல்லது வடக்கையேபார்க்கவேண்டும்-மற்றதிக்குகள்கூடாது என்றதாயிற்று. சொன்னவிலக்கணம் நிறைந்தஅந்தமனிதனும் ஸ்வஸ்திகம் முதலியஎந்தவாசனத்தையாயினும்கொள்ளலாம்- என்பதை பத்மாஸனமென்பதாதியால்விரிக்கின்றார். பத்மாசனம்= இரண்டு துடைகளின்மேலும்இரண்டுகாற்குதிகளைச்சேர்த்துஇருகைகளையும்முதுகின்பக்கமாகமாற்றிச்செலுத்திடவலக்கையால் இடதுகால் பெருவிரலையும்,இடதுகையால்வலதுகால் பெருவிரலையும்,பிடித்து நிமிர்ந்து இருப்பதேயாம். ஸ்வஸ்திகமென்பது துடைக்கும் முழந்தாளுக்குமிடையே இரு உள்ளங்கால்களையும் மலர்த்திச்செலுத்த

லாம். பத்திராசனமென்பது ஸீவினியென்ற மர்மத்தின் பக்கங்களின் அண்டத்துக்குக்கீழ் இருகுதிகால்களையும் செலுத்திபாதத்தின் இருபக்கங்களையும் கைகளால் பிடித்துக்கொள்ளுதல், என்று ஸ்ரீசங்கரானந்தகுருமூர்த்திகள் இலக்கணம் வகுத்தருளினர். சுகாசனமென்பது சூதசம்ஹிதையிற் சொன்னபடி கைவல்யோபனிடதவியாக்யானத்திற் குறிக்கப்பட்டது. யோகாஸனமென்று படித்ததால் ஆமைபோலமைந்தவாசனம் அதன்பொருளென்றுவது, அல்லதுயோகத்துக்கு உபயோகமுள்ளமற்றெந்தவாசனமென்றுவதுபொருள்கொள்ளவேண்டும். பட்டநாராயணரெழுதிய இதனுரையில் யோகயாஞ்ஞியம் முதலிய நூல்களிலிருந்து ஆசனலக்ஷணங்கள் விரிவாய்எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. அவைகள் வருமாறு:— "(க) ஊர்வோருபரி விப்ரேந்த்ர க்ருத்வா பாததலே உபே | பத்மாஸநம் பவேதேதத் ஸர்வேஷாமபி பூஜிதம் (உ) ஜாநூர்வோரந்தரே விப்ர க்ருத்வா பாததலே உபே | ருஜுகாய: ஸமாஸீந: ஸ்வஸ்திகம் தத்ப்ரசக்ஷதே || (ங) ஸீவிந்யாஸ்தத: பார்ஶ்வே குல்பௌ நிக்ஷிப்ய பாதயோ: | ஸவ்யே தக்ஷிணகுல்பம் து தக்ஷிணே தக்ஷிணேதரம் | ஏதத் ஸ்வஸ்திகம் ப்ரோக்தம் ஸர்வபாபப்ரணாஶநம் | (ச) குல்பௌ ச வ்ருஷணஸ்யாத: ஸீவிந்யா: பார்ஶ்வயோ: க்ஷிபேத் || பார்ஶ்வபாதௌ ச பாணிப்யாம் த்ருடம் பத்த்வா ஸுநிஶ்சலம் | பத்ராஸநம் பவேதேதத் ஸர்வவ்யாதிவிஷாபஹம் |" என்பனவாம். இவற்றின் பொருள்கள் முன்னொருவாறுசுருக்கிக்காட்டப்பட்டன. இங்குயோகாசனமென்ப்பட்டதையே ஸித்தாஸனமென்று ஹடயோகப்பிரதீபிகை கூறுகின்றது. "யோநிஸ்தாநகமங்க்ரிமூலகடிதம் க்ருத்வா த்ருடம் விந்யஸேத் மேண்ட்ரே பாதமதைகமேவ ஹ்ருதயே க்ருத்வா ஹநும் ஸுஸ்திரம் | ஸ்தாணு: ஸம்யமிதேந்த்ரியோऽசலத்ருஶா பஶ்யேத் ப்ருவோரந்தரம் ஹ்யேதன்மோக்ஷகவாடபேதஜநகம் ஸித்தாஸநம் ப்ரோச்யதே ||" இதி இதன் பொருள் யோனித்துவாரத்தில் (அதாவது தேகமத்தியத்தில் ஒ

னுகால் குதியுனைத்தும், மற்றொன்றை ஆண்குறியில் வைத்தும், மார்புமுதலிய அவயவங்களை ஒருவழியாய் நிமிர்த்தியும், இந்திரியங்களையொடுக்கி அசைவற்றவனாய் கண்கொட்டாது இரண்டுபுருவங்களின் நடுவைப்பார்த்து இருப்பானாகில் அதுவேமோட்சகவாடத்தைத்துறக்கும் ஸித்தாஸனமெனப்படுமாம் என்று. சுகாஸனமென்பது ஹடயோகப்ரதீபிகையில் சொல்லப்பட்டது- அதனை அங்கீகரிக்க.

அவதாரணிகை.

இனிப்பிராணாயாமத்தின் முறையைக் குறிக்கின்றார்.

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] என்று

(இ—ள்) மூக்கின் ஒருபுறத்தை விரலால் அடைத்து மற்றொன்றால் காற்றையுள்வாங்கி அக்கினியைத்தரிக்க வேண்டும். சப்தத்தையே நினைக்கவேண்டுமென்பது. எ-று

(வி—ரை) பிராணாயாமத்துரியமுத்திரை இங்கு விரலெனக் குறிக்கப்பட்டது. ஒருபுறத்தை அடைத்துக் கொள்வதென்றால் அமிழ்த்திக்கொள்வதென்பதுபொருள். மற்றொன்றால் ஆகர்ஷிப்பதென்பதற்கு ரேசனமுறையால் வாயுவைச்சோதித்து பூரணமென்கிற முறையால் பூர்த்திசெய்வது பொருளாம். அக்கினியைத்தரிக்கவேண்டும் = கும்பகம் செய்யவேண்டும். அச்சமயம்பிராணாயாமம் ஸபீஜமாகும் பொருட்டு நாதத்தையே அல்லது மத்திமையென்று வாக்கிலுள்ள நாதாம்சத்தையே அக்கினியாக நினைக்கவேண்டும். "[illegible] = அக்கினிதேவன் வாக்காய்முகத்தையடைந்தான்" என்றுசுருதிகூறுதலால், அங்ஙனமுரைக்கப்பட்டதென்க. ஸ்வப்பிரகாசத்துவமென்றது ஸமானதர்மமாம்.

அவதாரணிகை

குறித்தபிரணவத்தை ஸ்மரிக்கும்படி நிரூபிக்கின்றார்.

ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்ம

ஓமித்யேதம் ந ரோசயேத் |

திவ்யமந்த்ரேண பஹுஶ:

குர்யாதாத்மமலச்சிதே ||௨௰௨|| என்று

(இ — ள்) பிரணவமென்பது ஏகாட்சரப்பிரம்மம். பிரணவத்தையென்றும் தள்ளக்கூடாது. மலம்துலையும் வரையில் பலமுறைதிவ்வியமந்திரத்தால் யோகத்தைச்செய்ய வேண்டும். எ — து

(வி — ரை.) காத்தல் என்றபொருளில் அமைந்த 'அவ' என்றவினைப்பகுதியின்மேல் 'க்ரு' என்றவிகுதிசேர்த்து பிரணவம் உண்டாதலால் தன்னைஜபிக்கும் பெரியோரைக்காப்பது அதுவென்றேற்படுகின்றது. ஏகாக்ஷரம் = அகரம்முதலிய அங்கங்கள் அதற்கிருப்பினும், அகண்டமாகிய வர்ணங்களில், ஐ ஔ, என்ற எழுத்துகளில் ரகரமும் லகரமும் அமைந்திருப்பதாயும், அதுஉயிரெழுத்தாகிய அவ்வெழுத்துகளினும் வேறெனஉபசரிக்கப்படுதல்போல இங்குள்ள ஓரெழுத்தில் பலவெழுத்துகளுண்டாமென உபசரித்தலே அதுவாமெனக; பிரம்மம் = வேதம்; தத்துவத்தை நிரூபித்தலாலும், அல்லது தத்துவத்தைச்சொல்லுதலாலும், அதனுடன் ஒற்றிற்றுநிற்றலாலும், பிரணவத்தைப்பிரிக்காது ஒன்றாகவே உச்சரிக்கவேண்டுமென்பதற்காக மீண்டும் அதனையெடுத்துக் குறித்தார். அதன் மும்மாத்திரைகள் தனித்துச்செபித்தற்கியலாவாமெனக. திவ்யமந்திரத்தால் = இதயாகாசத்துள் நித்தியம், சன்னிதானம் செய்யதால் திவ்யமெனப்பெயர்பெற்றபிரணவமாகிய மனனசாதனத்தால்; மனனசாதனமேமந்திரமெனப்படும். மலமென்பது ஈண்டு அஞ்ஞானம். இதனால் பிரணவநாதத்தையே யிடையறாது சிந்தித்துத்தெளியவேண்டுமென்பது பெறப்பட்டது;

அவதாரணிகை

இனித்தியானமுறையைக்காட்டுகின்றார்.

பஶ்சாத்³த்⁴யாயீத வை பூர்வம்
க்ரமஶோ மந்த்ரவித்³வ்யய꞉ |
ஸ்தூ²லாதிஸ்தூ²லஸூக்ஷ்மம் ச
நாபே⁴ரூர்த்⁴வமுபக்ரம꞉ ||௨௧|| என்று

(இ—ள்) பிறகுமுன்சொன்னபிரகாரம் மந்திரத்தையறிந்தவித்துவான் முறையே நாபிக்குமேல் தொடங்கி தூல அதிகத்தூல சூக்குமங்களைச்சபிக்கவேண்டும். எ—று.

(வி—ரை) பிறகு = நாதசொரூபத்தைத்தானாக அனுசந்தானம் செய்தபிறகு. அது இடையறாது அனுவர்த்திக்குங்காலத்து முன்சொன்னபிரகாரம் = பிரத்தியகாத்தும சொரூபமாக நாதத்தைதியானம் செய்யவேண்டுமென்ற விதிப்பிரகாரம். மந்திரமறிந்த = மந்திரமாகிய பிரணவத்தையறிந்த. வித்துவான் = கானகந்தாண்டக்கையிலேந்திய கொள்ளியைப்போல் வாசகத்தைவிட்டு வாச்சியத்திடத்தேமனதை நிறுத்தினவன். முறையே = முதலில் சவிசேஷத்தையும் பிறகு நிர்விசேஷத்தையுமாய் அல்லது முதலில் ஒருமாத்திரையுளது, இரண்டாவது இரண்டுமாத்திரை யுளது என்றமுறையில். அம்முறையையேகாட்டுகின்றார்ஸ்தூலம்என்பதாதியால்; ஸ்தூலம் = பருத்தது,புலப்படுவது. அதிகத்தூலம் = தூலத்திற்குச்சிறிதுஉட்பட்டது. சூக்குமம் = முற்றும்சிறியது. அல்லது அதீந்திரியம், இதனால் தூலசூக்கும சூக்குமதரங்களைமுறையேதியானிக்க வேண்டுமென்றேறபட்டது. அவ்விதத் தியானம் செய்யவேண்டியதற்குரிய இடங்களைக்குறிக்கின்றார் நாபிக்குமேல் என்பதாதியால்; நாபியில்ஸ்தூலனாகிய பிரம்மாவையும் இதயத்தில் சூக்குமனாகிய விஷ்ணுவையும், சூக்குமதரனாகிய ருத்திரனைப் புருவநடுவிலும், சிரஸில் சூக்குமதமனாகிய துரீயனையும் தியானிக்கவேண்டும். அங்ஙனமே சுருதியும் கூறுகின்றது "அகாரம் ப்ரஹ்மாணம் நாபௌ உகாரம் விஷ்ணும் ஹ்ருதயே மகாரம்

ருத்ரம் ப்ரூமத்யே ஓங்காரம் ஸர்வேச்வரம் த்வாதசாந்தே அகரத்தையும் பிரம்மதேவனையும் நாபியிலும், உகரத்தையும் விஷ்ணுவையும் இதயத்திலும், மகரத்தையும் ருத்திரனையும் புருவநடுவிலும், ஓங்காரத்தையும் ஸர்வேசுவரனையும் துவாதசாந்தத்திலும்" என்று. இவ்விதமே பலசுருதிகள் பற்பலவிடங்களிலுள.

அவதாரிகை

சமாதியையடைய விரும்பும் யோகிகளுக்கு இந்திரியங்களை நிக்கிரஹிக்கவேண்டியது மிகமுக்கியமென நிரூபிக்கின்றார்.

திர்யகூர்த்வமத: த்ருஷ்டிம்
விஹாய மேதாவீ ஸ்திர: |
ஸ்திரஸ்தாயீ விநிஷ்கம்ப:
ஸதா யோகம் ஸமப்யஸேத் || ௨௨ || என்று

(இ—ள்) குறுக்கேயும், மேலும் கீழும், கண்பார்வையைவிட்டு மேதாவியாயுள்ளவன் அசைவற்றுஸ்திரமாய் உட்கார்ந்து என்றும்யோகத்தைப் பயிலவேண்டும். எ—று.

(வி—ரை) குறுக்கேயென்றது நாற்புறங்களிலுமென்றபொருளில். இதனைமுதலிற்சொன்னது கண்ணினியல்புமேலும் கீழும்நோக்காதுபக்கத்தையே நோக்குமாதலால், என்க. மேலும் கீழும்பார்வையைவிட்டு என்றது முதன்மை நோக்கிச் சொன்னது எல்லாப்புலன்களையுமடக்கியென்பது கருத்து. மேதாவியாயுள்ளவன் = யோகசொரூபத்தையும் அதன் பிரயோஜனங்களையும் தெரிந்துகொண்டவன். அசைவற்று ஸ்திரமாயுட்கார்ந்து = ஆசனவிதிப்படி ஆசனங்களைக்கைக்கொண்டு மனச்சஞ்சலத்தையுமொருவாறொழித்து. உள்ளும்புறம்பும் எவ்விதச்சஞ்சலமுமற்று என்பது அதன்கருத்து. என்றும், = கர்மங்களுக்கு விரோதமில்லாமல்மற்றைய காலங்களிலெல்லாம்; யோகத்தை = சித்தவிருத்தியைத் தடுக்குமுபாயத்தை, அல்லது ஆத்துமகைவல்லியம் சித்திக்கும்வழியை; அப்பியசிக்கவேண்டும்; ஆவர்த்திக்கவேண்டும்.

அவதரணிகை

மேலே தாரணையென்ற பிரதானசித்திக்குரிய லக்ஷணம் கூறுவாராய் பிராணாயாமத்தின் முக்கிய அளவைக்காட்டுகின்றார்.

நாலமாத்ரே விநிஷ்கம்பம்
தாரணாயோஜநம் ததா |
த்வாதசமாத்ரோ யோகஸ்து
காலதோ நியம: ஸ்ம்ருத: || ௨௰௨ || என்று

(இ—ள்) காளமாத்திரத்திலசைவிற்று நிற்றலும், முன்னே சொன்னபடி யோஜனமும் சேர்ந்தால் தாரணையாம். பனிரெண்டு மாத்திரையுள்ள யோகமே தாரணையெனப்படும்.

(வி—ரை) நாளமாத்திரத்தில் = குதநாளமாத்திரத்தில். ஆசனநாளத்தில் அசைவற்றுநிற்றல் = அபானத்தைச்சுருக்குங்காலத்து எவ்விதமான அசைவும் இல்லாதிருத்தல். அங்ஙனம் முற்கூறியபடி யாசனங்களில் ஸ்திரமாயிருத்தல். இரண்டும் சேர்ந்தே யோஜனம். தாரணையென்ற யோகாங்கமாம். குறித்தகாலங்கள் வரைகுறித்தவிடங்களில் பிராணனை நிலைநிறுத்துவதே தாரணையாமென்பது கருத்து. எப்பொழுது கால அளவு உண்டு, அப்பொழுதே யோகம் சித்திக்குமாதலால், அதற்கு அளவு கூறுகின்றார்- பனிரெண்டு மாத்திரையென்று. மாத்திரையென்பது ஓர்குறிலெழுத்துச்சரிக்கும் காலம். அல்லது ஓர்பிரணவத்தின் காலம் அல்லது பிராணாயாமத்தின் காலம். அவைகள் பனிரெண்டுகொண்டது ஒருதாரணையாம. அங்ஙனமாயின், முதற்கூறியமாத்திரை அப்பியாசிகளுக்கும், பிரணவமாத்திரை யோகத்தில் சிறிது டயற்சிகொண்டவற்கும், அதன்பிறகு அதிகம்பயின்றவற்குமற்றதுமாம் என்க. இதற்கு ஸ்ரீசங்கரானந்தகுருமூர்த்திகள் "காலமாத்ரா ததா யாயா: தாரணாயோஜநம் ததா" என்று பாடத்தை மாற்றியுரைசெய்தனர். அவர்பாடத்திற்கும்பொருள் அவரேகுறித்தார். காற்றுகள் ஒன்றுக்கொன்று சேர்கபரிவதுதாலேயாம். மாத்திரையென்று வாயுதடைபடுபோர்காலமாம். ஆயாமமென்பது வாயு

ஷிரிவாய்ச் செல்லும் வேகத்தினளவாம்; தாரணையென்பதுவாயு வை ஓரிடத்தில் அசைவறச்செய்வதாம்; யோஜனமென்பதுஅக் கினிமுதலிய வற்றில், வாயுவைக்கலக்கச்செய்தலாம். ஆகவேதா லை, மாத்திரை, ஆயாமம்,யோஜனம் தாரணையென்ற ஐவகையப்பி யாசங்களாவசியகமென்பது. மற்றது முன்போல். நாராயணபட் டருரையில் "தாலோ மாத்ராதயோ யாமஃ" என்றெடுத்துவி யாக்கியானம் செய்ததுவருமாறு.— தாலே, இஃதுயோகசாஸ்திர ங்களில் ஓர்கால அளவாக ஒரேரூபமாகக் காட்டப்படுகின்றது. (அதாவது) வெளியிலுள்ளவாயு சந்துகளில் உள்ளே பிரவேசிக் குங்காலமும், உள்ளேயுள்ள வாயுவெளியே வருங்காலமுமாம். அங்ஙனமானால் அது என்றும் சமானகாலமாகவே இருக்கும். மு தல்தினத்தில் எவ்வளவுகாலமோ அவ்வளவே மறுதினத்தில் அ து சம்பவிக்கும். மாத்திரை, இதுவும்கால அளவுடையதே, பூர கத்தில் பதினாறுமாத்திரையானால் கும்பகத்திலறுபத்துநான்கு. ரேசகத்தில் முப்பத்திரண்டு என்பதே. யோகம் = சமாதி அதுவு ம்கால அளவுக்குட்பட்டதே. அதற்குக்காலவளவில்லாதுழி சமா தியால் கற்பகாலம்வரை மண்ணின்கண் மறைந்தமுனிகட்கு என் றும் விதேஹகைவல்யம் கூடாதொழியும்- தாரணை = மனதுக்கு சங்கற்பமே தொழிலென்பதாதி தியானமாம். அதுவும் "யாப யெத்ரம்வஸுபிகாஃ ஸவரோகைஃ ப்ரமுச்யதே |— ஐந்துநாழிகை யளவு தரித்தால் ஸம்ஸாரரோகங்களால் விடுபடு வான் என்பதாதிப்பிரமாணங்களில் அதற்கும் காலஅளவே கு றிக்கப்பட்டிருக்கின்றது. யோஜனம் = பிராணனையும் அபானனை யும் ஒன்றுசேர்த்தல். முதல்தினத்தில் பனிரெண்டுபிராணாயாம ங்களானால் மறுதினத்திலுமதற்கு ஏற்றத் தாழ்வின்றிச் செய்ய வேண்டும். பனிரெண்டுமாத்திரையுள்ளது யோகமென்று நாத பிந்துபநிடதம் கூறுகின்றது. அதுவும் காலஅளவுடையதே. ஒ ன்றுக்கொன்று ஸமானகாலமுடையதாகவே 'கோஷிணீ' முதலி யவவஸ்தைகள் நிரூபிக்கப்பட்டன. அல்லதுஇங்குகுறித்த தாலே முதலியன பரத்திலும் நியமமுள்ளனவாம். இவையெல்லாம் கா லவளவைக்குட்பட்ட பயனைக்கொடுப்பனவேயன்றி காலவள வைக்கடந்தபயனைக் கொடாதென்பததன கருத்து என்றார். ஊரு

தொநியஃ' என்பதை 'காகுதொநியதஃ' என்றும் மாற்றினரே ன்றிதனுமேலேற்படுகின்றது. யாம் தென்னாட்டவர் பாடத்தையனுசரித்து உரையிட்டோம். எஃதுஇதமாய்த்தோன்றுகின்றதோ அதையேற்றுக் கொள்ளலாம் என்பதோர் சிறிது.

அவதரணிகை

மேல்லயோகிகளுக்கு அவசியம் தியானிதற்பாலதும், சுத்த, நாதரூபமும், வைகரிக்கு வேறுமான பரமாட்சரத்தை நிரூபிக்கின்றார்.

அகோஷமவ்யஞ்ஜனமஸ்வரம் ச
அகண்ட்டதால்வோஷ்ட்டமநாஸிகம் ச |
அரேகஜாதம் பரமூஷ்மவர்ஜிதம்
யதக்ஷரம் நக்ஷரதே கதஞ்சித் ||௨௪|| எ-று

(இ-ள்) கோஷமற்றதும், வியஞ்சனமில்லாததும் ஸ்வரமில்லாததும், தாலு கண்டோஷ்டம் இவையற்றதும் நாசியற்றதும் ரகரவகையுடன் சேராததும், இருவகை ஊஷ்மாக்களில்லாததும், எது என்றும் நசிக்காதது அதுவே அக்ஷரமாம். எ-று.

(வி-ரை) கோஷமென்பது வர்க்கங்களின் மூன்று நான்கு ஐந்தாவதா எழுத்துகளும். (ஹ) என்ற எழுத்துமாம் இவையாகாதது என்றதால் இவைகளுக்கு வேறான இலக்கணம் பெற்றது என்பது பொருளாயிற்று இங்ஙனமே மேலும் கூட்டுக. அட்சரத்தைத் தியானிக்க வேண்டுமென்பதாதி இடங்களில் அட்சரமென்பது தியானிக்கற்பாலதாகக் குறிக்கப்பட்டமையின், உச்சரித்தல் மாத்திரத்திலொழிந்துபோகும் தன்மையுள்ள வைகரீ ரூபமாம். அனித்தியமான அட்சரங்களில் தியானம் பொருந்தாதுபற்றி சங்கைநிகழ அச்சங்கையையொழித்தற்பொருட்டு அவ்வட்சரமிஃதென்று ஈண்டு வேதநாயக விரிக்கின்றான். அட்சரமென்பது பிராகிருதமென்றும் அப்பிராகிருதமென்றும் இருவகைப்படும். அவற்றுள் பிராகிருதாட்சரமென்பது ஸ்தானம் பிரயத்தினம் முதலியபல்வகைவேற்றுமைக

ளால் பல்வகைப்பட்டுத்தோன்றும். அவற்றையெல்லாம் உபசி ங்காரக்கிரமத்தால இட்டானத்தில் நிஷேதித்து சுத்தநிர்த்தனை கண் அக்கரத்தன்மையை நிரூபிக்கின்றார் கோஷமற்றது என்பதாதியால். கோஷமென்பதை முன்விரித்தோம். அவையன்றி மற்றயவக்கரங்களோவெனச் சம்சயம் நேர்ந்துழியஃதலவெனகின்றார். வியஞ்சனமில்லாதது = கோஷம் தவிரமற்றைய வியஞ்சனங்களிற்சேராதது. தனித்தமெய்யெழுத்தாகாதுழி அஃதுயிரெழுத்தோவென்றசங்கையொழிக்கின்றார் ஸ்வரமில்லாததும் என்று. ஸ்வரமென்பனவுயிரெழுத்துகள் அவைகளுடன் கூடியமெய்யெழுத்துக்கு அக்கரமென்றபெயர் ஆன்றோர்வழக்கிலமைந்தது. அஃதலவெனின், தனித்த வுயிரும் உயிர்மெய்யுமாகாதென்பது முடிந்தது. இங்ஙனமானால் உயிருமல்லமெய்யுமல்ல, உயிர்மெய்யுமல்லவென்றேற்படுங்காலத்து ஆய்தவெழுத்து முதலியனவற்றைப்போல இஃதோர் சார்பெழுத்தோவெனச்சங்கை நிகழ்ந்துழி அதனையொழிக்கின்றார் தாலுதந்தோஷ்டம்இவையற்றதுமென்று. தாலுவென்பது இருகன்னங்களினுட்புறம். தந்தங்களென்பனபற்கள், ஓஷ்டமென்பது உதடு. சிலவோர்ஸ்தானத்தில்உண்டாயவையாதலால். அவைகளைக்குறித்தற்குத்தாலுவென்று இங்கெடுக்கப்பட்டது. சில இருஸ்தானங்களிலுமுண்டாவனவாதலால், அவற்றைக்குறிக்கதந்தோஷ்டமென்றது. மேற்கண்ட இருவகையெழுத்துகளிலுமகப்படாதது அஃதொன்றும் என்பதாயிற்று. இங்ஙனம்உயிரும், மெய்யும், உயிர்மெய்யும், சார்பெழுத்தும் ஏதுமாகாதவிவ்வெழுத்து நாசியென்றவிடத்திற்றோன்றும் 'அனுஸ்வார'மோவென அதனையும் மறுக்கின்றார் நாசியற்றது என்றதால். இதன்மேல் ரகாரம் முதலிய சிலவெழுத்துகளுடன் கூடிய ஹகாரமாகிய 'ஹ்ரீம்காரம்' முதலியனவற்றைப்போல் உரம் என்ற இதயத்தில் தோன்றும் எழுத்தோவெனச்சங்கை நிகழின் அதனையுமொழிக்கின்றார் ரகரவகையுடன் சேராததென்பதால். ரகரவகை = ஒவ்வொருவர்க்கங்களின் இறுதியெழுத்துகளும், அந்தஸ்தங்களெனப்படும், ய, ர, வ, ல, க்களும். இங்ஙனம் எல்லா எழுத்துகளுமாகாதது இவ்வெழுத்தாயின் "க்ருத்வா ஹ்ருதி [illegible] விராசு! — அக்கினிவாக்காகி முகத்தை யடைந்தான்" என்று சுருதிகள் கூறியபடி வாக்கென்ற காரணநாதரூபமாயினும், அல்ல

து அதற்கும் காரணமான அக்கினிரூபம் ஆயினும் அஃதாகாதோ வெனின், அவையல்லவென்கின்றார் இருவகையூஷ்மாக்களு மில்லாதது என்று. ஊஷ்மாவென்பது, அக்கினியையும் காக்கையுங்குறித்தது. இரண்டுமில்லாதது என்றால் இதற்கிலக்கணந்தா ன்யாதெனின், அதனைக்குறிக்கின்றார் எது நசிக்காததோ அஃதே அக்கரமாம் என்று. இதனுல் செவிப்புலனுக்கு விஷயமாய் உச்சரித்தவுடன் நசிக்குமியல்பினதாய் ஓர்கணமாத்திரையளவுடைய பல்வகை வொலிகளாலுமெழுத்துகளுக்கு விலக்கணமாயுமவற்றி ற்குக்காரணமாம், 'ஸ்போடம்' என்றுசொல்லக்கூடிய நித்திய நாதமே பிரணவசொரூபமாகிய அட்சரமாமென்பது சொல்லப்பட்டதாயிற்று. இதனையே ஆசிரியர் பதஞ்சலியார் ...

... — எஃது என்றும் நசிக்காததோ அஃது அட்சரம். அல்லது எங்கும் வியாபித்துளதோவென்ற பொருளில் வியாபித்தலைப் பொருளாய்க்கொண்ட 'அச்' என்ற வினைப்பகுதியில் 'ஸர' என்ற விகுதியைச்சேர்க்க 'அக்கர' மென்றசொல் உண்டாம். ஒலியெழுத்தையே அக்கரமெனவுங்கொண்டார் முன்னோர்குத்திரங்களியற்றியமேலோர்கள், அக்கர விலக்கணங்கூறியருளினர். இவற்றுள்வைகரியாய் முகத்தில்தோன்றும் வெழுத்தொன்றும் அகண்டமாய்வியாபகமாய் நின்றுள நாத ருக்குமவெழுத்தொன்றும் உளதாமெனப்புலப்படுதலால் அவற்றில் ஒன்றுவாச்சியமும் ஒன்றுவாசகமுமாய் உபாதிகளால் பல்வகைவேற்றுமைகளையடைந்து உபாதியொழிந்தவிடம் அகண்டநாதரூபமாய், அஜபாஹம்ச ஸ்வரூபமாய், உபாசிக்கற்பாலதாய், இவ்வுபநிடதம் கூறியதாய்; இதன்பொருளையமைக்கவேண்டும். இச்சுருதியைமூலமாய்க்கொண்டே மஹாபாஷியக்காரர் கூறியதும் மற்றையவையாகரணர் கூறியதுமாமென்க. இங்கு குறிக்கப்பட்டவக்கரம் புறப்புலன்களுக்கெட்டாது அகப்புலன்களாகிய மனப்புலன்களுக்கேஎட்டுவதொன்றாதலானும், செவிப்புலன்களுக்கெட்டும் அக்கரங்களுக்குமுற்றும் விலக்கணமாதலானும், நித்தியமாதலானும் ஹம்ஸஸ்வரூபமாதலானும், அஜபத்துள்ளாதலானும்,கோஷமற்றதென்பதாதிகளுக்கு வேறுபொருள்களுங் கூறலாம். அவையாவன.— கோஷமற்றது = கோஷம் = ஒலி, செவிப்புலனுக்

கப்படும் விஷயம் அஃதற்றது. காக்கையொலிமுதலியவற்றைப்போலதனித்த எழுத்துருவமற்று நிற்பதன்று பிரணவம்வர்ணருபமாதலால். ஹம்ஸமும்அங்ஙனமேயாதலால், வியஞ்சனமில்லாதது=ஸ்வரமில்லாதது=உயிர்மெய்யென்ற இருவகைவேற்றுமையற்றது; மேல்மதஇமைமுதலியவாக்குகளில் சூக்ஷுமமானகருவிகளைக்கொண்டுண்டாம் சூக்ஷுமநாதமுமஃதலவென்னின்றூர்நாலுவென்பதாகியால்; புருவமத்தியிலும்நாசியினதுநுனியிலும் உள்ளே ஊடுறுவிச்செல்லும் உண்ணூதமாகையால்- இது நாசியிலுமுண்டாகாததாம். ":உரவஸிகஂமெஸிரவஸிவ—' மார்பிலும்கண்டத்திலுமுச்சியிலு'மெனவாசிரியர் பதஞ்சலியார் பகுத்தருளியபடி ரகரவகையுண்டாம்உச்சிமுதலியவிடங்களுமிதற்குஸ்தானமல்லவாம்" என்பதாரகரவகையுடன் சேராததென்பதிதன்கருத்து. " ஐஸாயா° வஜூரஸெூயஃ ஷிஂஶஷோயா॰ாவிஷுயா = இடையிற்சந்திரனும் பிங்கலையிற்சூரியன்' என்றுயோகநூல்கள் கூறியவாறு உள்ளத்துள்ள இருவகைச்சோதிகளும் கடந்து நிற்பதிஃதென்பது, இருவகையூஷ்மாக்களில்லாதது என்பதின் கருத்து; இதனால் எவ்வித எழுத்துகளுமுண்டாம் ஸ்தானத்தைக்கடந்து நிற்பது இவ்வெழுத்தென்பது முடியும்; மற்றவைகளையுமிங்ஙனமேகாண்க.

அவதாரணிகை

மேற்குறிப்பிட்ட அட்சரத்தின் உபாஸ்தியின் பயனைக்குறிக்கின்றூர்.

வெ-நாஸஎமஉூவெ-கஊமஃ௰
ஷ்ராணஸெூ நாஷிமஊூகி'
அதவஸஂவஷ்வெஸந்ிகஷ்௰
யஈ்ாமஃ-ழஊநாயவெ । உரு ॥ என்று.

(இ—ள்) இவ்வக்ஷரம் எவ்வழிபோகின்றது, அவ்வழியே பிராணமும் போகும். ஆகையால் அன்னவ்வழியடையவேண்டியதனையே நித்தியம் அப்பியசிக்கவேண்டும். எ—து

(வி—ரை) இந்த அக்ஷரம் மேற்குறித்த சுத்தப்பிரணவ நாதம். எந்தமார்க்கத்தையடைகின்றது. அவ்வழியிலேயே பிராணன்செல்லுகிறதென்றால் அஜபையின்கெதியும் பிராணமார்க்கமும் ஒன்றாகுமாமென்க. பிராணன்மேலும் கீழும்ஸஞ்சரித்தலால் அதன் உராய்தலால்மட்டும் இந்நாதம் என்றுமுள்ளதோன்றுமாமென்பது கருத்து. ஆதலாற்றான் அந்நாதம் உண்டாகும் இடமாகிய முதுகெலும்பைவீணாதண்டமென்று வழங்குகின்றார்கள். இவ்வுபாஸ்திபிரணவஸ்வரூபஸாட்சாத்காரத்தால் ஆன்மாவைதன்மயமாய்ச்சேவிக்கச்செய்யுமென்பதுஇச்சொற்றொடரின் துணிபு

அவதரணிகை

நாதமும் அதன்மூலஹேதுவான் பிராணனும், ஆகாயத்தையே ஆசிரயிப்பதொன்றாதலின், இங்குகுறித்தநாதப்பிராணன் களுக்கு எந்தவாகாசமும இடமெனத்தோன்றும் சங்கையைநிவர்த்திக்கின்றார்.

ஹ்ருத்வாரம் வாயுத்வாரம் ச
மூர்த்நித்வாரமதாபரம் |
மோக்ஷத்வாரம் பிலம் சைவ
ஸுஷிரம் மண்டலம் விது: ||௨௬|| என்று

(இ—ள்) இதயத்துள்ள துவாரமும்,வாயுத்துவாரமும் சிரசிலுள்ள துவாரமும், மற்றதும் மோட்சத்துவாரமெனப்படும். இதனைபிலமென்றும் மண்டலமென்றும் சுஷிரமென்றும்சொல்லுவார்கள். எ—று.

(வி—ரை.) இதயத்துவாரம், தஹராகாசமெனப்படும் சிதாகாசமாம், வாயுத்துவாரம் = இடைபிங்கலை சுழிமுனைகள். சிரசிலுள்ளதுவாரமென்பது துவாதசாந்தமெனப்படும் ஸஹஸ்ரரந்திரம். மற்றுமுள்ளதென்பது இதனினும் அதிசூக்குமமாய் நாபிகண்டம் முதலியவற்றிலுள்ளது. இவையெல்லாம் மோட்சத்துவாரமாம். சொபாவத்தில் வாயுசஞ்சரிக்கும் நாசியொன்று நீங்கலாகமற்றைய எந்தத்துவாரத்தில்பிராணன்பிரவேசித்தாலும்மோ

ட்சசாதனஞானோத்பத்திக்கு அது ஏதுவேயாமென்பதிதின் கருத்து. மேற்கண்ட துவாரங்களெல்லாம் பாவனமாத்திரையென, சங்கையை எதிர்நோக்கி அதன்சொரூபத்தைக் குறிக்கின்றார், பிலம்என்பதாதியால்; பிலம் = சிறிதுபள்ளம்; ஸஹஸ்ரம் = நாடித்துவாரம் முதலியன; மண்டலம் = கபாலத்துக்குட்பட்ட சந்திரமண்டலம் முதலியன.

அவதாரணிகை.

மேல் யோகானுட்டானமுள்ளவர்களுக்கு அவசியம்தள்ளவேண்டுவனஇவை யாவுமென நிரூபிக்கின்றார்;

பயம் க்ரோதமதாலஸ்யம்
அதிஸ்வப்னாதிஜாகரம் |
அத்யாஹாரமனாஹாரம்
நித்யம் யோகீ விவர்ஜயேத் ||௨௭|| என்று

(இ—ள்) பயத்தையும் கோபத்தையும், ஆலஸ்யத்தையும், அதிகத்தூக்கம், அதிகமுழிப்புகளையும், அத்தியாஹாரத்தையும் அனாஹாரத்தையும், யோகியாயுள்ளவன் நித்தியம் விடவேண்டும். எ—று

(வி—ரை) பயம்கோபம்முதலியன சித்தத்தின் சமாதியைக்கெடுக்குமாதலால் அவைகளை விரதம் முதலியகாரணங்களின்றி உபவாசம் யோகிக்கில்லையென்பது இம்மந்திரத்தின் முடிந்தகருத்து.

அவதாரணிகை

இங்ஙனம் யோகத்தை யனுட்டானம் செய்பவர்க்கு சொரூபஞானமுண்டாவதற்குக்கால அளவைக் குறிக்கின்றார்.

அனேன விதினா ஸம்யக்
நித்யமப்யஸ்யத: க்ரமாத் |
ஸ்வயமுத்பத்யதே ஜ்ஞானம்
த்ரிபிர்மாஸைர்ந ஸம்ஶய: ||௨அ|| என்று

(இ—ள்) இந்தவிதியைக்கொண்டு முறையாய்நன்று நித்தியம் அப்பியாசம் செய்பவர்க்கு மூன்றுமாசங்களிலேயே ஞானமுண்டாகும். ஸம்சயமில்லை.

(வி—ரை.) ஓர்விரதத்தைக் கொண்டு விடாதபடிநடத்துவோர்க்கு பலன் அதிசமீபத்தில் கிடைக்குமென்றும், அதற்குச்சம்சயம் முதலியவையென்றும் கூடாதாகையால் அவ்விஷயத்தில் சம்சயமுண்டாகாதவழி வேதம் வற்புறுத்துகின்றதென்பதும்.இம் மந்திரத்தின் முடிந்தகருத்தாம்.

அவதரணிகை

பலவிசேஷத்தையெதிர்பார்ப்பவற்கு உண்டாம்பயனைக் குறிக்கின்றார்.

𑌚𑌤𑍁𑌰𑍋 𑌜𑌨𑌯𑍇𑌦𑍍𑌦𑍇𑌵𑌾𑌨𑍍
𑌪𑌂𑌚𑌮𑍇 𑌤𑍁𑌲𑍍𑌯𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌾𑌨𑍍 ।
𑌇𑌚𑍍𑌛𑌯𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌕𑍈𑌵𑌲𑍍𑌯𑌂
𑌷𑌷𑍍𑌠𑍇 𑌮𑌾𑌸𑌿 𑌨 𑌸𑌂𑌶𑌯𑌃 ॥ ॥௨௯॥ என்று

(இ—ள்) நான்குமாதங்களால் தேவர்களைப் பார்ப்பான் ஐந்துமாதங்களால்பிரம்மநிஷ்டர்களையறிவான். ஆறுமாதத்தில் தான்விரும்பியபடி கைவல்யத்தையடைவான். சம்சயமில்லை. எ—று

(வி—ரை) தேவர்களை — திரோதானவித்தையினால் மறைந்துதிரிகிறவர்களை. பிரம்மநிட்டர்களை = அவர்களைக்காண்பது யோகமில்லாதார்க்கு எளிதன்றுதலாலெனக. இங்ஙனம்சொரூபசாக்ஷாத்காரம் பெற்று பிரம்மநிஷ்டர்களையும் கண்டுதேவதரிசனமானபிறகு ஆறாவதுமாதம்முதல் ஆத்துமதெரிசனம் முதிர்ந்து தன்மயனாய் நிற்பானென்பதும் இதுவேபரமபலமாமென்பதும் இதன்பொருளாம். மூலத்தில் 'விக்ரமான்' என்றதற்குப் பதிலாய் விக்ரம: என்றுபடித்தால் ஐந்தாம்மாதத்தில் பிரம்மநிஷ்டனாவானென்றும்; துல்யவிக்ரம: என்றுபடித்தால்தேவர்

களுக்குச் சமானமான ஸித்தியுடையவனாவானென்றும் பொருள் கொள்ளவேண்டும்,

அவதரணிகை

மேலே பிராணாயாமத்திற்கு மாத்திரையின் வேற்றுமையாலமையும் சுவரூபபேதத்தையும் அதன்வேற்றுமையாலமையும்பல பேதத்தையும், நிரூபிக்கின்றார்.

𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑌃 𑌪𑌞𑍍𑌚𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑍁
𑌚𑌤𑍁𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑍁 𑌵𑌾𑌰𑍁𑌣𑌃 ।
𑌆𑌗𑍍𑌨𑍇𑌯𑌸𑍍𑌤𑍁 𑌤𑍍𑌰𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑍁
𑌵𑌾𑌯𑌵𑍍𑌯𑌸𑍍𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌃 ॥௩௮॥ என்று

(இ—ள்) ஐந்துமாத்திரையுள்ளது பார்த்திவம். நான்கு மாத்திரையுடையது வாருணம். மூன்று மாத்திரையுடையது தைஜஸம் இரண்டுமாத்திரையுள்ளது வாயவ்யம். எ—து

(வி—ரை) மேற்கண்டமாத்திரையளவைத்தரித்தால் ப்ராணன் ஜயிக்கப்படுமே அவ்வப்பூதங்கள் ஜயிக்கப்படுமென்பதும் கருத்து.

அவதரணிகை.

மேலே ஒரேமாத்திரையுள்ளப் பிராணாயாமத்தின் பயனையும் மாத்திரையின்றிகேவலகும்பகமாய்நிற்கும் பிராணாயாமத்தின் அளவிலடங்காப்பெருமையையும் குறிக்கின்றார்.

𑌏𑌕𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌤𑌥𑌾𑌕𑌾𑌶𑍋
𑌹𑍍𑌯𑌰𑍍𑌧𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 ।
𑌸𑌨𑍍𑌧𑌿𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌮𑌨𑌸𑌾
𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑍇𑌦𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌤𑍍𑌮𑌨𑌿 ॥௩௯॥ என்று

(இ—ள்) ஒருமாத்திரையுடையது ஆகாசம். மாத்திரையில்லாததையே சிந்திக்கவேண்டும். மனதுடன்சந்தியைச்செய்து ஆத்மாவிடத்தில் ஆத்மாவினாலேயே சிந்திக்கவேண்டும். எ—து

(வி—ரை) ஒரேமாத்திரையுடையதென்றது ஏற்றம் தாழ்வின்றி ஏகரூபமாயுள்ளது; மாத்திரையில்லாதது=அளவைக்கடந்து சமாதியில் கேவலகும்பகமாய் நிற்பது; இஃது அகற்பகமோவெனச் சங்கைநிகழாதவழி நிரூபிக்கின்றார் மனதுடன் என்பதாதியால்; ஆத்துமாவினிடத்தே சந்திசெய்வித்துஎன்றால் ஆத்துமாவினிடத்து மனதைலயித்ததாக நினைத்து என்பதுபொருள்; இவ்விதம் தியானம்செய்தலே அளவற்றுப் பிராணாயாமம் நிலைபெறுதலுக்கு ஏதுவாம்.

அவதரணிகை

மேலே பிராணாயாமத்திற்காக தெரிந்துகொள்ளவேண்டியபிராணத்தினளவைக்குறிக்கின்றார்.

த்ரிம்ஶத்பர்வாங்குல: ப்ராண:
யத்ர ப்ராண: ப்ரதிஷ்டித: ।
ஏஷ ப்ராண இதி க்யாத:
பாஹ்யப்ராணஸ்ய கோசர: ॥௩௨॥ ன்றுள

(இ—ள்) முப்பதுபெரியஅங்குலமுடையது பிராணன்சஞ்சரிக்கும்இடத்தினளவாம். வெளிப்பிராணனுக்குஇடமானஇதையேபிராணனென்று சொல்லுவார்கள். எ—று.

(வி—ரை) பெரிய அங்குலமென்பது நடுவிரலில் குறுக்களவு. அதுபோன்றமுப்பது என்றால் ஏழரைப்பிடியென்பது பொருள். இது யவத்தின்குறுக்களவு எட்டுக்கொண்ட அங்குலத்தில் பதினைந்தேயாகும். அந்தயவங்களில் சிறிதுபெரிது பேதங்களால் இதனையே பனிரெண்டங்குலமென்றும் பதினைந்தங்குலமென்றுஞ் சொல்லப்படும். இந்த அளவுசரீரத்துக்குமேற்பட்டது. "ஶரீராதிக: ப்ராண: த்வாதஶாங்குலக: | = சரீரத்துக்கு மேற்பட்டது பிராணன் பனிரெண்டங்குலமதிகம்" என்று யாஞ்ஞியவல்கியர் கூறுதலால். உண்மையில் முற்காலத்தில் நானூறுவருடங்கள் சாதாரண ஆயுளும், மூன்னூற்றறுபது எலும்புகளும், இருந்த சரீரங்களுக்கு நாளொன்றுக்கு நாழிகை

யறை அதிகமாதலால், இரண்டரைமடங்கு இப்போதுள்ள பிராணனிலும் அவர்களுக்குப் பிராணனிருந்தது. அதனையேமுப்பதங்குலமென்றது. ஆகையாற்றான் அக்காலத்துச் சுவாசத்தின்கணக்கையும், எண்பதும் நூறும் என்பதாதியால் மேலேசொல்லப்போகின்றார். இவற்றுள்உசிதம்போல் கொள்ளவேண்டும். இவ்விதமானபிராணன் தேஹத்தின் வெளிப்புறமாதலின், [illegible] தேஹத்தைபிராணமயமென்றறியவேண்டும்; அது தொண்ணூற்றாறு அங்குலஅளவுள்ளது,' என்று யோகநூல்கள் கூறுதலால் சரீரத்தினுட்புறத்துத்தொண்ணூற்றாறங்குலங்களும், வெளியில் பனிரெண்டுமாகச்சேர்த்து நூற்றெட்டு அங்குலங்கள் பிராணத்தினளவாம்.என்று ஏற்பட்டது. இவ்வளவே பிராணவாயுவின் அதிகாரத்துக்குட்பட்டதாம்.

அவதரணிகை

இனி நாடோறுமுண்டாகக்கூடிய சுவாசங்களின் சங்கியையைக்குறிக்கின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥ கூ ॥ என்று

(இ—ள்) எண்பதும் நூறும்ஆயிரங்களும் மூன்றுபத்தும்லட்சத்திற்குஒன்று இரவும் பகலும் சேர்ந்துசுவாசப்பிரமாணமாம். எ—று

(வி—ரை) இந்த சுவாசப்பிரமாணம் மூற்குறித்தசரீரத்திற்குரியது. ஆசிரியர் சங்கராநந்தயோகிகள் "முன்னேனிரூபித்தபடி மூக்கின் வழியாய்ச்செல்லும் சுவாசங்கள் ஒவ்வொருதினத்துக்கும் இருபத்தோராயிரத்து அறுநூறேயாயினும், மற்றயத்துவாரங்களால் வெளிப்படும் சுவாசங்களையும் கணக்கிட்டு இங்ஙனம் வேதம்கூறியதாக ஒருவாறு உரையிட்டனர். நாராயணபட்டர்

இதனை ஒருவழியாய் ஹம்சோபநிடதம் குறித்தபடி சேர்த்தார் அவர்சேர்த்தவழியாவது:— எண்பதும் ஆறும் நூறால்பெருக்கப்பட்டால் எண்ணாயிரத்து அறுநூறும் ஆயிரங்கள் பத்தும்மூன்றுமென்றால் பதின்மூவாயிரமாம். இதற்கொண்டபொருளின் இருபத்தோராயிரத்து அறுநூறு என்ற ஹம்ஸோபநிடதம் கூறியவாறே முடிந்தது. ஆனால், லட்சமென்ற சொல்லுக்கு லக்ஷியம் என்ற பொருள் கொடுத்து 'உற்றுநோக்கில் என்று உரையிடவேண்டும் ஒன்று என்பதற்கு ஒருவனுக்கு என்றும், வேதங்களுக்குரிய விலக்குவிதியைக்கொண்டு வியாக்கியானம் செய்யவேண்டும். இதனால் ஒரு இரவும் பகலுமென்பது சுவாசங்களேயாம். அவ்வளவு சுவாசங்கள் செல்லாமல் யோகபெலத்தால் அவைமீந்தனின்றால் அவைஇவனுக்கு அதிக ஆயுளாகத் தோன்றுமென்பது சுருதியின்முடிந்தகருத்தாம். இவ்வளவால் தேர்ந்த யோகப்பிரக்கிரியையாதெனின் அதுவருமாறு:— யமநியமங்களென்கிறயோகாங்கங்களால்சரீரதோஷங்களைமுற்றுந்துலைத்து நாற்றமில்லாதவிடத்தில் நதிதீரம் முதலியஸ்தானங்களில், ஸித்தம், சுவஸ்திகம், பத்துமம் பத்திரம், ஸிம்மம் முதலியஆசனங்களின்மேலே ஒன்றைக்கொண்டு ஆஹாரநியமம் உள்ளவனாய் 'தௌதீர்வஸ்திஸ்ததா நேதிஸ் த்ராடகம் நௌலிகம் ததா| கபாலபாதிஶ்சைதானி ஷட்கர்மாணி ப்ரசக்ஷதே| தௌதீ = (கடசோதனம்)என்றசுத்தி. வஸ்தி (வஸ்திசோதனம என்ற மலாசயச்சோதனம்.) நேதீ = (நாசியின்சோதனம்) த்ராடகம் = (நேத்திரசோதனம்) நௌலிகா (கர்ப்பசோதனம்) கபாலபாதீ (கபாலசோதனம்) என்ற ஆறுகர்மங்களுண்டென்பார்" என்று யோகிகள் கூறிய ஆறுகர்மங்களைக்கொண்டும், பிராணாயாமங்களைக்கொண்டும், நாடிகளைச் சோதித்துக்கொண்டு இடையறாது அப்பியசிக்கப்படும் பிராணாயாம பெலத்தால் கேவல கும்பகஸித்திக்க கால்பெருவிரல் முதல் சிரம் வரை மர்மப்பிரதேசங்களில் பிராணனையும் மனதையும் தரித்து எவ்விதத்தும் இந்திரியங்களை நிக்கிரகித்து பிருதிவிமுதலிய ஐந்துதாரணைகளால் பூதகம் பௌதிகம் இரண்டுதத்துவங்களையும்சோதித்து ஸகுண நிர்க்குணத்தியானமுறைகளால் தமோகுணத்தையும் மலத்தையும் துலைத்து உன்மனீபாவத்தைப் பெற்று சமாதி

யையடையத்தக்கபடி ஆறுசக்கரங்களையும் கடந்து துவாதசாந்தமென்னும்பிரம்மரந்திரத்தையடைவதே. இதன் முறைவருமாறு:— மூலபந்தம், உட்டியானபந்தம், ஜாலாந்தரபந்தம் இவைகளாலும், மஹாபந்தம், மஹாவேதம், சாலனம் என்றபிரயோகங்களாலும், குதத்திலுள்ள அபானவாயுவைமெள்ளமேல்கிளப்பியதனால் மூலாதாரத்திலுள்ள முக்கோணத்தினிடையேயுள்ள அக்கினியைச்சொலிக்கச்செய்து, அதனால் நாடீகந்தத்தில் நாகசொரூபமாய் முகத்தால் எட்டரைச்சுற்றுச்சுற்றி புச்சத்தின் முனையைக்கவ்விசுழிமுனையின் அடித்துவாரத்தையடைத்து துயின்றிற்கும் குண்டலியைக்கொளுத்திக்கிளப்பி சுழிமுனையின் துவாரத்தை விளக்கி அதனிடையே காயாக்கினியின் சுவாலையுடன் வாயுவையுட்செலுத்தி அணுடியின் கணுக்கள்போன்ற அறுசக்கரங்களையும் பிரணவத்தியானத்தாலும் பரமேசுவரசிந்தையாலும் கடந்துமெள்ள மேற்குறித்தவாயு அக்கினி இவற்றின் சகாயத்தால் சுழிமுனையின்வழி உச்சியடைந்து ஆயிரவிதழ்க்கமலத்தை யடைவானென்பது. இதனையே ஆத்துமாராமசாதுவும் குறித்தார். அதுவருமாறு:— "ஆஸனம் கும்பகம் சித்ரம் முத்ராக்யம் கரணம் ததா | அத நாதானுஸந்தானமப்யாஸானுக்ரமோ ஹடே ||" = ஆசனம், விசித்திரமாகிய கும்பகம், அங்ஙனம் முத்திரையென்ற முக்கியசாதனம், நாதத்தின் அனுஸந்தானம் இவையே ஹடயோகத்தினப்பியாசக்கிரமமாம்'' என்று அபான வாயுவைச்சுருக்குவது காற்குதியால் குதத்துவாரத்தைத்தடுத்தலாலுமையும். ஹம்ஸோபநிஷத்திலும் ", தம் விதித்வா [illegible] ஸ்வாதிஷ்டானம் த்ரி: ப்ரதக்ஷிணீக்ருத்ய மணிபூரகம் ச கத்வா அனாஹதமதிக்ரம்ய விசுத்தௌ ப்ராணான் நிருத்யாஜ்ஞாமனுத்யாயன் ப்ரஹ்மரந்த்ரம் த்யாயன் த்ரிமாத்ரோஹமித்யேவம் ஸர்வதா த்யாயந்நுபவதி | = அங்ஙனமவனையறிந்தவர்மிருத்துயுவைப்பெறமாட்டார். குதஸ்தானத்தைத்தகைந்து ஆதாரத்திலிருந்து வாயுவைக்கிளப்பி சுவாதிட்டானத்தைமூன்றுமுறை பிரதட்சிணம்செய்து மணிபூரகத்தையடைந்து அநாஹதத்தைக கடந்

துவிசுத்தியிற்பிராணனை நிறுத்தி ஆஞ்ஞாஸ்தானத்தை யனுசரித்து பிரம்மரந்திரத்தை தியானித்து, யான் மூன்று மாத்திரைகளுள்ளனவனெனஎப்பொழுதும் தியானித்து, (உண்மையை) க்காண்பான்'' என்று இம்முறையே குறிக்கப்பட்டது. இங்ஙனம் ஒரே காலத்தில் பிராணன் அபானன் இவைகளைத்தகைந்திட்டால், சூலம், விக்கல், வயிற்றுப்பொருமல் முதலிய ரோகங்கள் உண்டாகாவோவெனின், ஆசிரியர் உபதேசித்தபடி மூன்று பந்தங்களையும் ஒரேகாலத்தனுஷ்டித்தால் அதன் பெருமையால் வாய்மூடினபூர்ணகடத்தைப்போல் அச்சரீரத்துக்கெக்குற்றமும்வராதாம் இம்மஹாயோகத்தின் பிரயோஜனம் அட்சராத்துமகெதியேயென்று இவ்வுபநிடதமே நிரூபித்தது. தௌதீவஸ்திமுதலிய அறுவகைக்கருமங்களின் முறைமைருமாறு:— ''[illegible] ||=நாலங்குல அகலமுள்ள ஓர்வஸ்திரத்தை த்தண்ணீரில் நனைத்து மெள்ளவிழுங்கவேண்டும். மீண்டும் அதனைமெள்ளமெள்ள வெளியில் இழுத்தால் இது வேதௌதியென்றகபசோதனமாம். கொப்புளளவு தண்ணீரிலிருந்து காற்றில்லாது ஆசனத்தை தண்ணீரின்மேல் அமைத்து உட்கார்ந்துமூலாதாரத்தைச் சுருக்கி உள்ளேதண்ணீரைஇழுப்பது வஸ்திகர்மமாம். நான்குவிரலளவுள்ள சிறிய ஓர்நூலை மூக்கின் வழி செலுத்திவாய்வழியே வெளிவாங்கினால் நேதியென்றநாசிமலத்

தைச்சோதிக்கும் வழியாமென்பர் சித்தர். கண்கொட்டாது, ஒரு சூக்ஷ்மமான லக்ஷியத்தைப்பார்த்து கண்ணீர் பெருகும் வரையிருந்தால் நேத்திரமலத்தைச்சோதிக்கும் த்ராடகமீதென்பராசிரியர் நீரின்கண்ணே: பெரிதாய சுழலுண்டாவதுபோலத் தோன்ற ட்டையை வணைத்து உந்தியை வலப்புறமும் இடப்புறமுமாகச்சுழ டினால் இதைநௌலிகமென்று சித்தர்கூறுவர். கொல்லன்றுருத்தியைப்போல் ரேசகபூரகங்களை வெகுவேகமாய் நடத்தினால் கபதோஷத்தைநிவிர்த்திசெய்யும்கபாலபாதியென்பதனைச்சொல்வார்கள் என்று உட்டியான ஜாலந்தர மூலபந்தங்களென்ற மூவகை பந்தங்களின் சொரூபத்தைப்பற்றி சரிகோபனிடத்தில் திருஷ்டித்திருக்கலாலதனை அவ்விடத்தனங்க மஹாபந்தமென்பது வருமாறு—

[illegible]

இடதுகாலின்குதிகாலை யோனிஸ்தானத்திற் சேர்க்கவேண்டும். வலதுகாலை இடது தொடையேற்சேர்க்கவேண்டும். அதன்பிறகு வாயுவை உள்ளேவாங்கி மோவாக்கட்டையை அழுத்திவைத்துக்கொண்டு யோனிஸ்தானத்தைச்சுருக்கி மனதைநிச்சலப்படுத்தி சக்தியுள்ளவரையில் மெள்ளமெள்ளக்காற்றைவெளிச் செலுத்தவேண்டும். முன்னே இடதுபுறத்திலப்பியசித்து பிறகு வலதுபுறத்திலப்பியசிக்கவேண்டும். இதில்வேறுசில பெரியோர்மதம்யாதெனில், கழுத்தைக்கட்டுவதை (மோவாய்க்கட்டையை அழுத்தியிருத்துவதை) விட்டுகடைவாய்ப்பற்களிடத்து நாவைச்சேர்த்துவைத்துக்கொண்டிருந்தால் அதுவே மஹாபந்தமாகுமாம். இதனையே பெரியசித்த

கொடுக்கத்தக்கதென்றும் காலபாச பந்தத்தை விடுவிக்கக்கூடியதென்றும், எல்லாநாடிகளிலும் மேனோக்குங்கெடுதிகளைத் தடுப்பதென்றும் பெரியோர்சொல்லுவார்கள்" என்பது. கோரக்கசித்தர்என்பவர் யோனியென்பதைப்பற்றிச் சொல்லுவதாவது:— [illegible] — ஆதாரமென்றகுஹியஸ்தானத்தினருகில்நான்குதளமுள்ளவோர் பத்மமுண்டு; அதன்மத்தியிலுள்ள திரிகோணமே காமஸ்தானமென்றும் யோனிஸ்தானமென்றும் ஸித்தர்களால் துதிக்கப்படுவது என்று. இந்தயோனியைச்சுருக்குவதும்காற்குதியாற்றானென்றும், அவ்வித அப்பியாசம் காமஜயஹேதுவாமென்றும், அவரே நிரூபித்திருக்கின்றார். மகாவேதமென்பதுவருமாறு:— [illegible] — மகாபந்தமென்று முன் நிரூபித்த பந்தத்திலுள்ளயோகியானவன் அப்பந்தத்தின் கண்ணமைந்த கண்ட முத்திரையில் மெள்ளமெள்ள வாயுக்களை யாகர்ஷித்து இரண்டுகைகளையும் பூமியில்வைத்துக்கொண்டு மெள்ள அடித்துடைகளைத்தட்டி இரண்டுநாசியின்வழியாகவும் வாயுவையிழுத்து உள்ளேநிறுத்தினால் சித்திரத்தில் அந்தவாயுதுடிக்கும்; அப்பொழுது அமிருதோத்பத்திக்கு ஏதுவான சோமசூரிய அக்கினிமண்டலங்களின் சம்பந்தமுண்டாகும். இவைமரணாவஸ்தைபுண்டாகுமென்ற வருத்தம் தோன்றினால், மெள்ளக்காற்றைரேசனம்செய்யவேண்டும். அப்பியாசித்தவற்கு சித்தியைக்கொடுக்கக்கூடிய மஹாவேதமென்பரிதனைமேலோர்" என்று. சக்திசாலனமென்பது: [illegible] — சுழிமுனையின

டிப்புறத்தில் தன்வாலைத்தன்வாயாற்கௌவிக்கொண்டு பாம்புவ டிவமாய்த்துயின்றிருக்கும் குண்டலசக்தியை ஆதாராக்கினியைக் கிளப்பி அதனுற்றபிக்கச்செய்தால் அது நித்திரையைவிட்டுவேகமாய்மேலே விரைத்துக்கிளம்பும். "இதுவேயாம்: வேரிடத்திற் ஸம்க்ருஷ்டாக்நிநா தப்தவாயுநா ஸம்வாஹித꞉ | ஸஹஸா ப்ரபுத்ய ஸர்ப்பவத் ஸ்வஸ்தாநம் ஸம்போத்யாதிஷ்டதி | - ' காயாக்கினியினால் கொளுத்தப்பட்டவாயுவினால் இருந்தவிடம்விட்டுக் கலைக்கப்பட்ட அந்தசர்ப்பமானது தனதுடலைநீட்டி விழித்துக்கொள்ளும். அதனைசந்திசாதனமென்பர். இவையெலாம்யோகத்தின்முறைகளிலோர் சிறிதாம், யோகோபநிஷத வியாக்கியானங்களிலிதன் விரிவைக்காண்க.

அவதாரிகை

இனிப்பிராணோபாஸ்திக்குரிய பிராணங்களின் ஐந்துபேதத்தையும்' அதன் ஸ்தானாதிகளையும் குறிக்கின்றார்.

ப்ராணஸ்து ஹ்ருதயஸ்தாநே
அபாநஸ்து குதே ஸ்தித꞉ |
ஸமாநோ நாபிதேசே து
உதாந꞉ கண்டமாஸ்ரித꞉ || ௬௪

வ்யாநஸ்ஸர்வேஷு சாங்கேஷு
வ்யாப்ய திஷ்டதி ஸர்வதா || ௬௫

(இ—ள்) முக்கியமானபிராணன் இதயஸ்தானத்திலும் அபானன்குதஸ்தானத்திலும், ஸமானன்கொப்புளிலும், உதானன்கண்டத்திலும், வியானன்எல்லா அங்கங்களிலும்வியாபித்துநிற்கின்றதாம். எ—து

அவதாரிகை

இனிபஞ்சப்பிராணங்களின் வர்ணங்களைக்குறிக்கின்றார்.

அத²வர்ணாந் ப்ரவக்ஷ்யாமி
ப்ராணாதீ³நாமநுக்ரமாத்|
ரக்தவர்ணோ மணிப்ரக்²ய:
ப்ராணவாயு: ப்ரகீர்த்தித:|
அபாநஸ்தஸ்ய மத்⁴யே து
இந்த்³ரகோபஸமப்ரப⁴:|
ஸமாநஸ்து த்³வயோர்மத்⁴யே
கோ³க்ஷீரத⁴வலப்ரப⁴:
ஆபாண்டு³ர உதா³நஸ்ஸ்யாத்
வ்யாநோ ஹ்யர்சிஸ்ஸமப்ரப⁴:|

(இ—ள்) மாணிக்கத்தைப்போல்சிவந்தநிறமுடையது மேற்கண்டவாயுக்களில்பிராணன். அதனடுவே அபானவாயு இந்திரகோபப்பூச்சிநிறமாய்இருக்கும். ஸமானமென்பது அந்தப்பிராணன்அபானன் இரண்டிற்குநடுவே பசுவின்பாலைப்போல் வெண்ணிறமுடையது. உதானமென்பது கரியநிறமாம். வியானமென்னும் வாயுபளப்பளப்புள்ள அக்கினியைப் போன்றநிறமுடையதாம். எ—று

அவதாரிகை

இந்நானும் பிராணோபாஸ்தியுடன் கூட மஹாயோகநிட்டை கூடி அநுமைக்கிரந்திக்ளையுமுடைத்து பிரம்ம ரந்திரத்தைய டைந்து ஸ்வேச்சையாய்ச் சரீரத்தைவிட்டால், புனர்ச்சன்மமில் லையென்று நிரூபிப்பாராய் 'ஶதம் சைகா ச ஹ்ருத³யஸ்ய நாட்³ய:| தாஸாம் மூர்த்⁴நாமபி⁴நிஸ்ஸ்ருதைகா| தயோர்த்⁴வமாயந்நம்ருதத்வமேதி விஷ்வங்ஙந்யா உத்க்ரமணே ப⁴வந்தி' நூற்றொருநாடிகளிருதயத்திலுள. அவற்றுளொன்றுச் சிரையடைந் தது. அதன்வழிமரிப்பவன் அமிர்தனுவான்மற்றவழிசென்றவன் பலவழிபோவான். என்பதுமுதலானபலவேறு சுருதிகளில் நிரூபித்தபொருளையே உபசங்கரிக்கின்றார்.

யஸ்யேதம் மண்டலம் பித்வா
மாருதோ யாதி மூர்த்தநி
யத்ர குத்ர ம்ரியேதாபி
ந ஸ புநரபிஜாயதே ந||
ந ஸ புநரபிஜாயத இதி ||௩௮||

(இ—ள்) எவனுக்கு இந்த மண்டலத்தையுடைத்து பிராணவாயு மேலே உச்சியிற்செல்லும், அவன் எங்கே இறந்தாலும் மீண்டும் பிறக்கமாட்டான். மீண்டும் பிறக்கமாட்டான்.

(வி—ரை) காற்றென்பது பிராணவாயு. மண்டலமென்பன ஸோமசூரியாதிமண்டலங்கள். இருமுறை கூறியது, வித்தையின் பொலிவைக் குறிக்கின்றது. இவையெலாம் இளம்பிறைசூடியிறைவனார் திருமலரடிகளில் ஓர் சிறுமலராகுமோ போலாகுக — — — சுபம்.

இங்ஙனம் கவுணிய குலப் பாலாழிக்குக் கவுத்துவ மணியாய்த்தோன்றி, ஸ்ரீ மேதா தக்ஷிணாமூர்த்தி கருணாகடாக்ஷத்தால் சகலகலைகளும் மோதியுணர்ந்து மிச்சிரமண்டலத்திற்றமது விஜயப்பிரதாபநிலைபெறநாட்டிய மஹாமேதவித்வத் வம்சத்திலகராய வையாகரண ஸார்வபௌம ஸ்ரீ ராமஸ்வாமி தீக்ஷிதர் செல்வக்குமாரரும் ஸ்ரீ ஸீதாம்பா கர்ப்பசுக்தி முக்தமாத்தவரும், ஸ்ரீமத் பாரத்வாஜ குலஜலதிக்குக் கவுத்துவமணியாய் அத்வைதவித்யாசாரியராய், நாற்றுநாலு கிரந்தங்களை நிர்வகித்தருளிய ஸ்ரீமத் அப்பையதீக்ஷிதேந்திரர் வம்சத்தில் அவதரித்த ஷட்சாஸ்திரவல்லப பாரமேசுவர உபநிஷன்மார்க்கப் பிரவர்த்தக ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய
ஸ்ரீமத் தியாகராஜ குருபுங்கவர் சரணசேவாபராயணரும்
பிரத்யக் பரசிவநிஷ்டா துரந்தர பரசாம்பவ பாதபத்ம
ரேணுசேவனத்தில் அன்புகொண்டுள்ளவரும்
"ப்ரஹ்மவித்யா" பத்திராதிபருமான
பரஸமய பஞ்சானன பாஞ்சஜன்ய
பண்டிதப்ரம்ம ஸ்ரீ ஸ்ரீநிவாஸ புங்கவர்
வடமொழியிலியற்றிய
அமிர்தநாதோபநிஷத்பிரபை
என்ற பேருரைக்கிணங்க
தென்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டு
பொலிவெய்தியது.

அமிர்தநாதோபநிடத தாத்பரியசங்கிரகம்

(0)

இவ்வுபநிடதம் எஜுர்வேதத்தைச் சார்ந்தது. இதனிடத்தே, மோக்ஷத்திற்கந்தரங்க சாதனமான, பிரம்ஹோபாசனமும், அதற்கு முக்கியசாதனமான யோகங்களும், அவ்வித யோகமுதலானவற்றின் சித்திக்கும் முக்கியஹேதுவான பரமசிவாராதனத்தின் பெருமையும், அவ்விதமான பரமசிவாராதன வித்யா பரம்பராசாரியன் ஸ்ரீமன் நாராயணனெனவும், சிவமந்திரங்களுக்குட்சிறந்தது பிரணவமெனவும், ஞானம் உண்டாகும்வரையில் கர்மபக்தி யோகங்களாகிய சாதனங்களவசியமெனவும், அவ்வித ஞானத்தாலேயே கைவல்யம் கைகூடுமெனவும், நிரூபிக்கின்றது இவ்வுபநிடதத்தின் அர்த்தம்பரமசிவ பிராப்தியே என்பதைப்பற்றி ஏகதேச அனுவாதமாய் மகாபாரதம் அனுசாஸநம் பதினாறாது அத்தியாயத்தில் ஓங்காரரதமாருஹ்ய [illegible] ஸ்வரம் என்று காட்டப்பட்டது ஆதலால் இவ்வுபநிடதம் சைவ வித்தையேயென்பது ஸ்பஷ்டமாதலால் இவ்விஷயத்தில் அதிகமாய் யாமெடுத்துரைக்கவேண்டியது யாதுமில்லையென்க.

முற்றிற்று.

அமிருதநாதோபநிஷத் அரும்பதவிளக்கம்.

அகோஷம் = ஒலியற்றது, கோஷமென்றவெழுத்திற்சேராதது.
அக்நி: = அக்கினிச்சுவாலை.
அநீஸ்வர: = ஜீவத்தன்மையையேற்றுபவன்.
அவர்ண: = கரியநிறமுள்ளது.
அமாத்ரம் = அளவுகடந்தது.
அரேபஜாதம் = ரகாரம்பிறந்தவிடத்துப்பிறக்காதது.
அவ்யஞ்ஜநம் = குறியற்றது, மெய்யெழுத்திற்சேராதது.
அஸ்வரம் = ஒலியில்லாதது; உயிரெழுத்திற்சேராதது.
ஆகர்ஷணம் = பூரகம்.
ஆகமா: = வேதம் முதலியசாஸ்திரங்கள்.
ஆத்மா = மனம், சரீரம், தைரியம், சேதனன்.
இந்த்ரகோபம் = ஓர்வகைப்பூச்சி.
உத்பலநாலம் = தாமரைத்தண்டு.
உபயோஷ்மவர்ஜிதம் = இருவகை யூஷ்மாக்களெனப்படும் குடும, ஒருவகையெழுத்துகளுமில்லாதது.
உல்கா = கொள்ளி.
ஊஹநம் = கருதல்.
காலாவச்சிந்நம் = காலத்தாலளவிடப்பட்டது.
கில்பிஷம் = பாவம்.
கைவல்யம் = மோக்ஷம்.
பீடம் = ஆசனம்.
தர்க்க: = யுக்திகளால் ஊஹித்தல்.
தர்பா: = குசங்கள். ஞாழல் முதலியன.
திவ்யமந்த்ரம் = ரகசியமந்திரமாகியபிரணவம்.
தோஷா: = வாதபித்தகபங்கள்.

அமிர்தநாதோபநிஷத அரும்பதவிளக்கம்

தாரணா = சரீரங்களில் பிராணவாயுவை நிறுத்தித்தியானித் தல்.

த்யானம் = தானேபிரம்மமெனத்தியானித்தல்.

ஸ்தாணுரிவ நிஷ்கம்ப: = ஓர்மரத்தின் தண்டைப்போல் நிச்சலமானவன்.

நிராதங்கம் = தன்னது சொபாவமற்றது.

பத்மகம் = ஓர்வகைஆசனம்.

பர்வததாதவ: = மலைகளிலுள்ள நற்செங்காவிமுதலியன.

பாதாங்குஷ்டம் = பெருவிரல்.

ப்ரத்யாஹார: = இந்திரியங்களை யொடுக்கும்படியாகிய ஓர்வகை யோகத்தினங்கம்.

ப்ராணாயாம: = பிராணவாயுவையடக்குதல்

பிலம் = இதயாகாசம்.

பத்ராஸனம் = ஓர்வகையாசனம்.

மணி: = சென்னிறமுள்ள ரத்தினம்.

மண்டலம் = சூரியசந்திராக்கினிகளின் மண்டலங்கள்.

மனோமயீ = மனதின் சொரூபமாயுளது.

மலா: = மலங்கள், அழுக்குகள்.

மாத்ராலிங்கபதம் = மாத்திரைகுறி இவைகளுடைய இடம், அல்லது சொல்.

மூர்த்தத்வாரம் = பிரம்மரந்திரம்.

மேதாவீ = மேதையுடையோன் ஆலோசனை சக்தியுடையோன்.

ரக்ஷா = காப்பு.

ரதமண்டலம் = ஓர்வகைஸாமமும், மண்டலப்பிராம்மணமெனும் யசுர்வேதமும்

ரச்மய: = பிரவாகங்கள்.

ரோதம் = கும்பகப்பிராணாயாமம்.

ஶ்ருங்காடம் = நாசிகை.

விததக்ரமா: = விரிந்த முறைகள்.

ஸம்வ்யவஹாரவர்ஜிதம் = சொல் அல்லது வேறு குறியாதுமி
ல்லாதது.

ஸஜாதீயஹாவ: = தம்மிடம் வேறேதுமில்லாததன்மை.

ஸம்யுதி: = சேர்க்கை.

ஸங்கல்ப: = சங்கற்பமேசொரூபமாயுடையது

ஸம்ஸர்கா: = பிறப்பொருட்சேர்க்கையாலமைந்தகுற்றங்க(ள்)

ஸூதா = இரதத்திலுள்ளான்

ஸுஷிரம் = சிதாகாயம்.

ஸ்வாஸநம் = ஒர்வகையாசனம்.

ஸ்வஸ்திகம் = ஞை

ஸ்தநயோ: = மார்புக்குக்கீழ்ப்பட்ட இடம்.

ஹ்ருத் = இதயம்.

ஹ்ருத்வாரம் = இதயத்துள்ள துவாரம்.

முற்றிற்று.



அமிர்தநாதோபதிட்ட இலக்கணக்கொத்து

(௦)

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

முற்றிற்று.